Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-04 17-04-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை 58



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

T.P: 024-222 4247

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்

(சி-11481)

# ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் குழுவை

# பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப்பகுதிக்கு அனுப்புக!

## ஐ.பா.உறுப்பினர்களுடனான சந்திப்பில் சு.ப.தமிழ்ச்செல்வன் வேண்டுகோள்

(டப்ளின்)

**ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவை சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழர்தாயகப் பிரதேசத்திற்கு அனுப்பி வைத்து சேதங்களை மதிப்பீடு செய்ய முயற்சிக்க வேண்டுமென தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் அவர்கள் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்று ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினரான றியான் பொருளாதார நாணயவிவகாரக்குழு மற்றும்அபிவிருத்திக்குழுவினரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இக்கலந்துரையாடலின் போதே அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

டப்ளின் ஐரிஸ். பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற

(12ஆம் பக்கம் பார்க்க)

## பி.செயலாளர் தவராஜாவின் கொலைக்கு விடுதலைப் புலிகள் கண்டனம்

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேச செயலாளர் ஏ.கே.தவராஜாவின் கொலையை விடுதலைப்புலிகள் கண்டித்துள்ளனர். இது குறித்து மட்டு அம்பாறை அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் புத்திஜீவிகளை கொல்வதன் மூலம் தமிழ்த் தேசியத்தை பலவீனப்படுத்தலாம் என நினைக்கும் தேசவிரோத்ச் சக்திகளே இந்தக் கொலையைப் புரிந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

40 வயதுடைய திருக்கோவில் பிரதேச செயலரான ஏ.கே தவராஜா நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்த நகைக்கடையில் ஆயுதமுனையில் கொள்ளை

வெள்ளவத்தை சவோய் படமாளிகைக்கு அருகாமையில் உள்ள பிரபல நகைக்கடை ஒன்றில் நேற்றுப் பகல் 12.10 மணியளவில் ஆயுத முனையில் பெருமளவு தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வான் ஒன்றில் சென்ற இனம் தெரியாதவர்கள் கடையில் உள்ளவர்களை ஆயுத முனையில் பயமுறுத்தியதுடன், கண்ணாடிகளை உடைத்துக்கொள்ளையிட்டுத்தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. தற்போது ஸ்தலத்திற்குவெள்ளவத்தை காவல்துறையினர் விரைந்துள்ள போதும் மேலதிக தகவல்களை உடனடியாக பெற முடியவில்லை.

## சுனாமி புனர்நிர்மாண வேலைகள் அரசு-புலிகள் ஒன்றிணைத்து பணியாற்றத் தூண்டியுள்ளது

### ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் கருத்து

சுனாமியையடுத்து ஏற்பட்டுள்ள புனர்வாழ்வு, புனர்நிர்மாண சேவைகள் இலங்கையில் இனப்பிரச்சினையில் அரசு - புலிகள் தரப்பினரை ஒன்றிணைந்து பணியாற்ற தூண்டியுள்ளன என்று ஐரோப்பிய பாராளுமன்றத்தின் உறுப்பினர் றியான் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய பாராளுமன்றத் தினதும் பொருளாதார நாணய விவகாரக் குழுவினரது அங்கத்தவர் ரிறியான் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், கூட்டு முயற்சியினால் ஏற்படும் பரஸ்பர நம்பிக்கை சமாதான முயற்சிகளுக்கு சாதகமாக அமையும் என்றார். தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான தூதுக்குழுவினரை நேற்று டப்ளின் நகரில் சந்தித்து உரையாடியபோதே இக் கருத்துக்களை அவர் தெரிவித்துள்ளார்.

## சமாதான முயற்சியின் நிலை குறித்து ஹெல்கேசன் அமெரிக்க இராஜதந்திரிகளுக்கு விளக்கம்

இலங்கையின் சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை குறித்து நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் அமெரிக்க இராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்துள்ளார்.

இம்மாத ஆரம்பத்தில் அமெரிக்காவிற்கு விஜயம் செய்த விதார் ஹெல்கேசன் அமெரிக் உள்துறை அமைச்சின் முக்கியஸ்தர்களுடன் இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் குறித்து கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அமெரிக்க சனாதிபதியின் முக்கிய இராஜதந்திரிகளில் ஒருவரும் உதவி இரா

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆனந்த சங்கரி தலைமையில் புலிகளுக்கெதிரான அரசியற் குழு

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான அரசியல் மற்றும் இராணுவ செயற்பாடுகளை மேற்கொள்ள புதிய அமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சியில் இந்திய புலனாய்வுப் பிரிவான றோ ஈடுபட்டுள்ளதாக இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி தலைமையில் அரசியல் நடவடிக்கைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும், இந்தக் குழுவினர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரச்சாரங்களை மேற்கொள்வார்கள் என்றும் இவர்களது பிரச்சாரங்களுக்கு பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டியங்கும் வானொலி ஒன்றும் சில இணையத்தளங்களும் பயன்படுத்தப்படுவதாகவும் அது தெரிவித்துள்ளது.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணாவின் ஆதரவாளர்கள் இந்தியாவில் தளம் அமைந்துள்ள ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர் அணியின் உறுப்பினர்கள் மற்றும் ஈ.என்.டி.எல்.எப் உறுப்பினர்களை உள்ளடக்கிய இராணுவப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் மீது

(12ஆம் பக்கம் பார்க்க)

## நினைவுக் கல் திரை நீக்கம்

1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி தமிழீழ கடற்பரப்பில் இடம்பெற்ற படகு விபத்தொன்றின் போது வீரச்சாவடைந்த *. கடற்புலி கப்டன் (தமிழிசை) (தெய்வேந்திரம் தேவசுஜிதா) என்ற போராளியின் நினைவுக் கல் நாளை விசுவமடு மாவீரர் துயிலுமில்லத்தில் நிரைநீக்கம் செய்து வைக்கப்படவுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி அன்னை பூபதியின் இறுதி மூன்று நாள் நிகழ்வுகள்

(புதுக்குடியிருப்பு)

தியாகி அன்னை பூபதியின் 17ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வில் இறுதி மூன்று நாள் நிகழ்வுகள் தமிழீழ பிரதேசம் எங்கும் மிகவும் எழுச்சியாக இடம் பெறவுள்ளது. புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இன்று இரணைப்பாலை வலையத்திலும், நாளை உடையார் கட்டு வலயத்திலும், நாளை மறுதினம் புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்திலும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

இறுதி நாள் அன்று புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலுள்ள சகல தொழில்சார் நிலையங்களும். மூடப்பட்டு அப்பகுதி வணிகர் கழக ஏற்பாட்டில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. அதே வேளை பாண்டியன் குளத்தில் 15ஆம் திகதி முதல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

சுகயீனம் காரணமாக நேற்று போராளி ஒருவர் சாவடைந்துள்ளார். வீரவேங்கை இயற்கதிர் சொ. பெயர்:-விஜயகுமார்-விஜிந்தன்/விஜி சொ.இடம்:-யோகபுரம்-உரும்பிராய்-யாழ்ப்பாணம் என்ற போராளியே சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# வரிவிளம்பரம்

## தவறிவிட்டது


13.04.2005 ஆம் திகதி யாழ்ப் பாண பிரயாணி ஒருவரிடமிருந்து கையடக்க தொலைபேசி ஒன்று பரந் தனுக்கும் - உப்பளத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை கிளிநொச்சியில் ஒப்படைக்குமாறு வேண்டுகிறார்.

(சி.5374)

## சுதேசி கோழிப்பண்ணை தங்கம் பெறும் தேர்வு

சுதேசி கோழிப்பண்ணையில் இறைச்சிக்கோழி கொள்வனவு செய்த வர்களில் குறி.இல. 036264 தொடர் இல.30267 உடையவிற்பனை அட்டை பெற்ற வாடிக்கையாளர் ஒருமாத காலத்தினுள் சமர்ப்பித்து ஒரு பவுண் தங்கச் சங்கிலியைப் பெற்றுக் கொள் ளவும். சுதேசி கோழிப் பண்ணை, நாவ லர் றோட், முள்ளியவளை. (5889)

## காணாமல் போன பொருள் பற்றிய அறிவித்தல்



(சி.11643)

பரந்தன்-முல்லை. நெடுஞ்சாலையில் தேராவில் சந்திக்கும் பரந்தன் சந்திக்கும் இடையில் இப் படத் தில் காணப்படும் பொருள் புல்லு வெட் டும் கருவியின் முக் கிய உரிதியாகிய ஆடு தண்டு (றொட்) வீதியில் இழுத்து வரும்போது தொலைந் துள்ளது. கண்டெடுத தவர்கள் தேராவில் பண்ணையிலோ, அல்லது கிளிநொச்சி யில் அமைந்துள்ள வன்னி வேளாண் நிறுவனத்திலோ தொடர்பு கொள்ள வும் தகுந்த சன்மா னம் வழங்கப்படும்.

## ஏல விற்பனை

கிளி/மாவட்ட கூட்டுறவுச் சங்கங் களின் ஒன்றியத்தின் தலைமைப் பணி மனையில் 20.04.2005ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பொயிலர் ராங் 01, நீர் இறைக்கும் இயந்திரம்-02என்பன பகிரங்க ஏலத தில் விற்பனை செய்யப்படும். (5911)

## N.E.C கல்வி நிலையம் A9 வீதி,கிளிநொச்சி

A/L 2007 மாணவர்களுக்கான சகல பாடங்களும் 15.04.2005 காலை 9.00 மணிக்கு எமது தனித்துவமான ஆசிரியர்களால் ஆரம்பித்துள்ளது.

(சி.6000)

## வகுப்புக்கள் ஆரம்பம்

### ஆதவன் கல்வி நிலையம் கிளிநொச்சியில்

2007-A/L கலை வர்த்தக வகுப் புக்கள் 15.04.2005 இல் ஆரம்பமாகி விட்டது. விபரங்களுக்கு சி.மகேந்தி ரன் (நிர்வாகி)(5992)

## சட்டவிரோத மண் அகழ்வு

யாழ்.அச்சுவேலிப் பகுதியின் கைத்தொழில் பேட்டையை அண்டிய பகுதிகளிலிருந்து சட்டவிரோதமாக மண் அகழப்பட்டு வருகின்றது.

இதனால் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதனைக் கட்டுப்படுத்த பொலிசார் உரிய நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை என விவசாயிகள் விச னம் தெரிவித்துள்ளனர்.

## மருந்துப் பொருட்கள் அன்பளிப்பு

யாழ்.வணிகர் கழகத்தினரால் சாவ கச்சேரி அரசினர் வைத்திய சாலைக்கு ஒரு தொகுதி மருந்துப்பொருட்கள் அன் பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

நாற்பது ஆயிரம் ரூபா பெறுமதி யான இம்மருந்துப் பொருட்களை அண்மையில் வணிகர் கழகத்தினர் சாகவச்சேரி வைத்திய அதிகாரியிடம் கையளித்துள்ளனர். (33)

# சாவு அறிவித்தல்

## லயன் நவரட்ணம் ஜெயத்திலகன்

(யா.திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத் தலைவர்)

லயன் நவரட்ணம் ஜெயத்திலகன் (Banker) இளைப் பாறிய வங்கியாளர், இலங்கை வங்கி, செலான் வங்கி, இந்து வாலிபர் சங்க செயலாளர், அரசடி ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்மன் ஆலய பொருளாளர், திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரட்ணம் ஜெயத்திலகன் 15.04.2005 வெள்ளிக் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நவரட்ணம், புனிதவதி தம்பதி களின் அன்பு மகனும், விசாலாட்சியின் அன்புக் கணவ ரும், ஜெயதீசன்(லண்டன்), ஜெயசீலன் (லண்டன்). ஆகி யோரின் அன்புச் சகோதரனும், குலேபா (லண்டன்), டொலி(லண்டன்), சத்தியநாதன் (அவுஸ் திரேலியா), Dr.இராசமுத்தையா (லண்டன்), காலம் சென்ற ரஞ்சித பூரணி (மக்கள் வங்கி), கதிர்காமநாதன்(கொழும்பு ஆயுள் வேதம்), நளாயினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சேயோன்(லண்டன்), சப்ரீனா(லண்டன்) ஆகியோரின் அன்பு பெரியப்பாவும், (இளைப்பாறிய மக்கள் வங்கி முகாமையாளர்) கோபாலகிருஷ்ணாவின் சகலனும், (ஆசிரியர் பரியோவான் கல்லூரி) கோபிகிருஷ்ணனின் அன்பு சித்தப்பாவும், துஷ்யந்தி(கனடா), துக்காயினி (அவுஸ்திரேலியா), றூபினி(அவுஸ்திரேலியா) ஆகியோ ரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.04.2005 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன் னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக் காக பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர் கள் அனைவருக்கும் தெரியப்படுத்துகின்றேன்.

92, பலாலி வீதி,
திருநெல்வேலி,
T.P. 021-2223113

தகவல் :-மனைவி
விசாலாட்சி

(5375)

# வீரச்சாவு அறிவித்தல்




யாழ்.வேலணை மேற்கைப்பிறப்பிடமாகக் கொண்ட கடற்புலி கப்டன் தமிழிசை (தேய்வேந்திரம்-தேவ சுகிதா) 27.11.1999 அன்று தமிழீழக் கடற்பரப்பில் நிகழ்ந்த படகு விபத்தில் வீர காவியமானார்.

இம்மாவீரர் தற்போது கனடாவில் வசிக்கும் தெய்வேந் திரம்-தங்கமுத்து தம்பதியினரின் பாசமிகு மகளும், தேவசுதா (பிரான்ஸ்), தேவலோஜினி(இந்தியா), தேவ சீலன் (கனடா), தேவசுரேசன் (சுவிஸ்), தேவசேனா (கனடா), தேவதுஸ்யந்தன் (கனடா), தேவதுயானி (கனடா), தேவபவானி (கனடா), தேவஅருட்குமரன் (கனடா), தேவரஞ்சினி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருச்செல்வம்(பிரான்ஸ்), சிவனேசராசா (பிரான்ஸ்), சந்திராவதி (கனடா), சந்திக்கா (சுவிஸ்), மதன் (கனடா), ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

இம்மாவீரரின் திருவுருவப்படம் சி.தேவராசா இல.592. 6 ஆம் யூனிற் இராமநாதபுரத்தில் இன்று 17.04.20005 மாலை 2.00 மணிக்கு வைக்கப்பட்டு 18.04.2005 அன்று பி.ப 3.00 மணியளவில் விசுவமடு மாவீரர் துயிலும் இல் லத்தில் திருவுருவப்படம் திரை நீக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளி கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:-
கண்ணன்(சுவிஸ்)
சகோதரன்

(சி.6052)

## குழாய் வழி எரிவாயுத் திட்டம் கைவிடப்படமாட்டாது-பாக்.

(இஸ்லாமபாத்)

ஈரானிலிருந்து குழாய் வழியே எரிவாயு கொண்டுவரும் திட்டத்தைப் பாகிஸ்தான் கைவிடாது என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

"குழாய் வழி எரிவாயுத் திட்டத்துக்கு அமெரிக்காவின் எதிர்ப்பு இருந்தாலும் அத்திட்டத்தைக் கைவிடமாட்டோம். பாகிஸ்தானின் நலனைக் கருத்தில் கொண்டே நாங்கள் முடிவெடுப்போம். மற்றவர்களுக்காக அல்ல" என்றார் அவர். ஈரான்-பாகிஸ்தான் குழாய் வழி எரிவாயுத்திட்டத்திற்கு எந்த வகையில் அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்தது என்பதை அவர் குறிப்பிடவில்லை.

## புதிய கடவுச்சீட்டு விதியை மறுபரிசீலனை செய்கிறது அமெரிக்கா

அமெரிக்காவிலிருந்து கனடா, மெக்சிகோ, பெரமுடா ஆகிய நாடுகளுக்குச் செல்ல, கடவுச்சீட்டு வைத்திருக்க வேண்டும் என்ற புதிய விதியை மறு ஆய்வு செய்யுமாறு அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் உத்தரவிட்டுள்ளார்.

# விண்ணில் பறந்தபடி இலக்கை தாக்கவல்ல எப்.16 விமானத்தை கோருகிறது பாகிஸ்தான்

(இஸ்லாமபாத்)

**விண்ணில் பறந்தபடியே விண்ணில் இருக்கும் எதிரியின் இலக்கை தாக்க வல்ல நவீன எப்.16 போர் விமானத்தை வழங்குமாறு அமெரிக்காவிடம் பாகிஸ்தான் கோரிக்கை விடுத்துள்ளது.**

கடந்த புதன்கிழமை பாகிஸ்தானுக்கு விஜயம் செய்த அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சரிடமே மேற்படி வேண்டுகோளை பாகிஸ்தான் விடுத்துள்ளது.

இதன்போது ஆம்ராம் ஏவுகணைகள் 60 கி.மீ.தொலைவில் உள்ள இலக்கை சென்று தாக்கவல்லவை. இந்த ஏவுகணை செலுத்தும் திறன் படைத்த எப்-16 போர் விமானங்களை விரைவில் தருமாறு பாகிஸ்தான் கோரியது.

ஆம்ராம் ஏவுகணைகளை ஏவும் விமானங்களை தரும்போது ஆம்ராம் ஏவுகணைகளும் தரப்படுமா என்பது தெரிய வில்லை. ஆம்ராம் ஏவுகணைகள் மிக நவீனமானவை பாகிஸ்தானிடம் அது கிடையாது எப்படியாகிலும் அதைப் பெற பாகிஸ்தான் முயன்று வருகிறது.

அமெரிக்கா முதலில் 24 எப்-16 விமானங்களை விற்க முன்வந்தது. ஆனால் பாகிஸ்தான் 70 விமானங்களை கோருகிறது.

எப்-16 விமானங்களை பாகிஸ்தானுக்கு விற்க 11 ஆண்டுகள் தடை இருந்தது. ஆனால் இப்போது இந்தத் தடையை நீக்குவதாக நாடாளுமன்றத்தில் அமெரிக்க அரசு கூறியுள்ளது ஆனால் இந்த முடிவை எதிர்த்து நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது.

சி-130 விமானம் ஏ.ஐ.எம்-9 ஏவுகணைகள் டி.ஓ.டபிள்யூ -2 ஏவுகணைகள் ஹோவிட்சர் 155 மி.மீ. பீரங்கி, ரேடார்கள் ஆகியவற்றையும் பாகிஸ்தான் கேட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா மொத்தம் 120 கோடி டொலர் மதிப்புள்ள ஆயுதங்களை விற்க முடிவு எடுத்திருக்கிறதாம்.

## அமெரிக்க-ரஷ்ய வீரர்களுடன் சோயுஸ் விண்கலம் விண்ணில் பறந்தது

இது விண்வெளியில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்தில் கடந்த ஆறுமாத காலமாகத் தங்கி ஆராய்ச்சிப்பணிகளை மேற்கொண்ட விண்வெளி வீரர்களைப் பூமிக்குத்திரும்ப அழைத்து வரவும் அவர்களுக்கு மாற்றாக புதிதாக ஒரு குழுவை விண்வெளிக்கு அழைத்துச் செல்லவும் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது.

இதில் ரஷ்யன் கொமாண்டர் செர்ஜி கிரிகலேவ், அமெரிக்க விண்வெளி வீரர் ஜான் பிலிப்ஸ், ஐரோப்பிய வீரர் ராபர்ட்டோ விட்டோரி ஆகியோர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## பால்மாவில் கலப்படம் சீனாவில் குழந்தைகள் பாதிப்பு

சீனாவில் கலப்படம் செய்யப்பட்ட பால்மாவை அருந்திய 200 இற்கு மேற்பட்ட குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு இதே பால்மாவில் கலப்படம் செய்யப்பட்டதால் 16 குழந்தைகள் இறந்ததாகவும், 200 இற்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# முன்னாள் அதிபர் மண்டேலாவுக்கு குழந்தைகளின் உரிமைக்கான விருது

(ஸ்டாக்ஹோம்)




தென்னாபிரிக்காவில் குழந்தைகளின் உரிமைக்காக பாடுபட்ட அந்நாட்டின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலாவுக்கு சுவீடன் நாட்டின் விருது வழங்கப்பட்டுள்ளது.

நெல்சன் மண்டேலா அவரது மனைவி கிரேஸா மைக்கேல் மற்றும் கென்யாவின் சமூக சேவகர்களுக்கும் இந்த விருது பகிர்ந்தளிக்கப்படுகிறது.

ரூ.45 இலட்சம் மதிப்புக்கொண்ட இந்த விருது இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டு "உலக நண்பர்கள் விருது" ஆகவும், உலக குழந்தைகள் நலன் காப்போம் விருது" ஆகவும் சுவீடன் வழங்கி வருகிறது.




அரசின் எச்சரிக்கையையும் மீறி சீனாவின் சுங்காய் நகரில் நடைபெற்ற யப்பானுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்களையும் அதன் போது இராணுவத்துடன் வாக்குவாதத்தில் ஈடுபடும் இளைஞனையும் காணலாம்.



காசா முனையிலிருந்து இஸ்ரேலிய இராணுவத்தால் சிறை வைக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கானோரில் ஒருவரான தனது மகனை விடுவிக்கக் கோரி அவரது உருவப் படத்துடன் ஏங்கி நிற்கும் பலஸ்தீன தாய்.

# இந்தோனேஷியாவில் தொடரும் நில நடுக்கம் எரிமலைகள் வெடிக்கும் அபாயம் உள்ளதாம்

(ஜஹார்த்தா)

இந்தோனேஷியாவில் கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட பூகம்பம் மற்றும் சுனாமிப்பேரலைகள் பேரழிவை ஏற்படுத்தியது. இதையடுத்து அவ்வப்போது அங்கு தொடர்ந்து நில நடுக்கம் ஏற்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் ஜாவா தீவுப் பகுதியில் மூன்று தடவை நில நடுக்கம் ஏற்பட்டது. மூன்றாவது நில நடுக்கம் 5.9 ரிச்டர் ஸ்கேல் அளவாகப் பதிவானது. இதில் 100 வீடுகள் வரை சேதமடைந்ததாக இப்போது புதிய தகவல் கிடைத்துள்ளது.

ஏற்கனவே ஜாவாதீவு அருகேயுள்ள அனாக் எரிமலை குமறிக் கொண்டிருக்கிறது. இதேவேளை இந்தோனேஷியாவில் மேலும் 8 எரிமலைகள் வெடிக்கும் அபாயம் உள்ளதாக விஞ்ஞானிகள் கூறியிருக்கிறார்கள்.



மூன்றாம் இளவரசர் றெயினியரின் இறுதிச் சடங்கின் போது அவரின் பூதவுடல் அடங்கிய பேழை மொனொக்கோவுக்கு எடுத்து வரப்பட்டது.

# புதிய போப்பை தேர்ந்தெடுக்கும் பணியில் கர்த்தினால்களுக்கு நிபந்தனைகள் தளர்வு

(வத்திக்கான்)

புதிய போப்பைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபடும் கர்தினால்களுக்குக் கட்டுப்பாடுகள் சில தளர்த்தப்பட்டுள்ளன.

அடுத்த போப்பாக ஜேர்மனியைச் சேர்ந்த ஜோசப் ரட்ஜிங்கர் தேர்ந்தெடுக்கப்படலாம். அதற்கான வாய்ப்புக்கள் சாதகமாக உள்ளதாகப் பெரும்பாலானவர்கள் கருதுகின்றனர்.

புதிய போப்பைத் தேர்ந்தெடுக்கும் பணி நாளை தொடங்குகின்றது. போப்பைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் தொடங்கி விட்டால் கர்தினால்களுக்குப் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் அவர்கள் மொபைல் தொலைபேசி பயன்படுத்தக் கூடாது. வெளி உலகத்துடன் தொடர்பு கொள்ளக்கூடாது. தேர்தல் முடியும் வரை அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட விடுதிகளில் தான் தங்க வேண்டும். வெளியில் எங்கும் செல்லக்கூடாது. கருத்து வேறுபாடுகள் வந்தாலும், அதை வெளிப்படுத்தக்கூடாது போன்ற பல விதிமுறைகள் வகுக்கப்பட்டன. அதன்படியே இதுவரை புதிய போப்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்த முறை அந்தக் கட்டுப்பாட்டுகளில் சிலவற்றை வத்திக்கான் தளர்த்தியுள்ளது. நாகரிக உலகில் தற் கால சூழ்நிலைக்கு ஏற்ப கர்த்தினால்களும் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கடந்த 1978 ஆம் ஆண்டு போப் தேர்தல் நடந்தது. அப்போது புதிய போப்பைத் தேர்ந்தெடுப்பதில் பெரும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டது. புதிய போப்பைத் தேர்ந்தெடுக்க அப்போது இரண்டு ஆண்டுகள் ஒன்பது மாதங்கள் இரண்டு நாட்கள் ஆயின. அதுவரை கடும் கட்டுப்பாடுக்குள் கர்தினால்கள் இருந்தனர். அது போன்ற சம்பவம் மீண்டும் நடக்காமல் இருக்க விரைந்து புதிய போப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கருத்து வலுப் பெற்றுள்ளது.. மூன்று நாட்களுக்குள் புதிய போப்பைத் தேர்ந்தெடுக்க முடியவில்லை என்றால் தேர்தல் ஒரு நாள் நிறுத்தி வைக்கப்படும். தேர்தலில் ஒரு மித்து கருத்து ஏற்பட பிரார்த்தனைக் கூட்டம் நடத்தப்படும். அதன் பின் மீண்டும் தேர்தல் நடக்கும்.

வத்திக்கானில் போப் இரண்டாம் ஜோன்போலுக்கு அடுத்த நிலையில் இருந்த ஜேர்மன் கர்தினால் ஜோசப் ரட்ஜிங்கா புதிய போப்பாக வாய்ப்புப் பிரகாசமாகப் இருப்பதாக வத்திக்கான் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஓய்வூதிய உயர்வு கோரி சீனாவில் அதிகாரிகள் ஆர்ப்பாட்டம்

சீனாவில் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் இரண்டாயிரம் பேர் ஓய்வூதிய உயர்வு கோரி மறியல் போராட்டம் நடத்தியுள்ளனர்.

திங்கள் முதல் புதன்கிழமை வரை இப் போராட்டம் நடைபெற்றுள்ளது. இந்தப் போராட்டம் கம்யூனிஸ்டு தலைவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## என்னை விடுவிக்க உதவுங்கள் முஷாரப்பிடம் பணயக்கைதி வேண்டுகோள்

(பரிஸ்)

ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட பாகிஸ்தான் தூதரக அதிகாரி "என்னை விடுவிக்க உதவி செய்யுங்கள்" என்று அதிபர் முஷாரப்புக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். ஈராக்கிற்கான பாகிஸ்தான் தூதரக அதிகாரி மாலிக் முகமது ஜாவீத் இவர் கடந்த வெள்ளிக்கிழமை காணாமல் போனார். மசூதிக்குத் தொழுகை நடத்தச் சென்றவர் திரும்பி வரவில்லை. அவரை விடுவிக்க வேண்டுமானால் இரண்டு கோடி ரூபாய் பிணைத்தொகையாக தரவேண்டும் என்று தீவிரவாதிகள் கோரி இருப்பதாக கடத்தப்பட்ட ஜாவீத்தின் மகன் கூறியிருக்கிறார். இதை பாகிஸ்தான் மறுத்துள்ளது.

இந்த நிலையில் அல்-ஜசீரா தொலைக்காட்சி ஒரு வீடியோ நாடாவை ஒளிபரப்பியது. அதில் தூதரக அதிகாரியின் பேச்சு இடம் பெற்று இருந்தது. அதில் " என்னை விடுவிக்க உதவி செய்யுங்கள்" என்று அதிபர் முஷாரப்பையும், வெளி நாட்டு அலுவல்கள் அமைச்சு சர்வதேச சமுதாயத்தையும் கேட்டுக் கொண்டுள்ளார். அவரை விடுவிக்க வேண்டுமானால் அதற்கான நிபந்தனை என்ன என்பதை கடத்தல் காரர்கள் அந்த வீடியோ ஒளி நாடாவில் தெரிவிக்கவில்லை.



ஜேர்மன் சென் நகரில் கடந்த பத்தாம் திகதி இடம் பெற்ற தாயக விடுதலைப்பறவைகளின் சுதந்திர தாகம் எழுச்சி நிகழ்வின் காட்சிகள்.

# வன்னிப் பிரதேசத்தில் பெருமளவான மக்கள் சுவாச நோய்களால் பெரிதும் பாதிப்பு!

## -பிரதான வீதிகளின் கிரவல் தூசுகளே முக்கிய காரணம்

(அலுவலக செய்தியாளர்)

**வன்னிப்பகுதியில் உள்ள பிரதான வீதிகளில் பெரும்பான்மையானவை தற்போதும் கிரவல் வீதிகளாக இருப்பதனால் பொதுமக்கள் மத்தியில் சுவாசம் சம்பந்த மான நோய்கள் அதிகரித்திருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன.**

குறிப்பாக அக்கராயன் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளர்களில் 85 வீதத்திற்கும் மேலானவர்கள் சுவாச நோய் காரணமாகவே சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று அவ் வைத்தியசாலை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இச் சுவாச நோய்களில் பெரும்பான்மையானோர் ஆஸ்மா வினால் பாதிக்கப்பட்டவர்களாகவே இனம் காண முடிகின்றது. என்றும் அவ்வாறு வரும் நோயாளர்கள் இந்த வைத்தியசாலை விடுதியில் தங்கி நிற்கும் வேளை அதனுடைய தாக்கம் இன்னும் அதிகரிக்கவும் வாய்ப்புக்கள் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு முக்கிய காரணம் பிரதான வீதிகளில் உள்ள கிரவ லாகும். வாகனங்கள் செல்லும்போது அதனால் ஏற்படும் கிரவல் தூசுகள் சுவாசத்துடன் கலக்கின்றன. இதனால் அது தொடர்பான நோய் ஏற்பட அதிக வாய்ப்பு உண்டு.

அக்கராயன் வைத்தியசாலை பிரதான வீதியும் அவ்வாறு அமைவதால் விடுதியில் தங்கும் நோயாளர்கள் கிரவல் தூசு களைச் சுவாசிப்பதால் நோய் அதிகரிக்கவும் வாய்ப்புகள் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வன்னிப் பிரதேசத்தில் முன்னர் தார் வீதிகளாக இருந்த பிரதான வீதிகள் கிரவல் வீதிகளாக மாற்றப்பட்டுள்ளன. இவற்றில் ஓரிரு வீதிகள் மீளவும் தார் போடப்பட்டு தற்காலிக புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் எஞ்சிய பெரும்பாலான பிரதான வீதிகள் கிரவல் வீதிகளாகப் பேணப் படுவதால் தொடர்ந்தும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங் களுக்கு ஆளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (கு)

## இன்று புதுக்குடியிருப்பில் சிந்து நடைக் கூத்துப் போட்டி

முல்லை மாவட்ட அரசியல் துறை அனுசரணையுடன் முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினரால் அன்னை பூபதியின் 17 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரின்வரலாற்றைச் சித்தரிக்கும் சிந்து நடைக் கூத்துப் போட்டி இன்று மாலை 7.00 மணிக்கு புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் ஈழவன் தெரிவித்தார்.

இம் மாவட்டத்தின் ஆறு பிரதேசங்களுக்கிடையே இப் போட்டி நடைபெறவுள்ளதாகவும் இப்போட்டியில் சிறந்த நாடகத் தெரிவும், சிறந்த நடிகர் தெரிவும், அண்ணாவிமார் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது எனத் தெரிவித்தார். (20)

## நல்லினப்புல் விநியோகம்

கால்நடைகளுக்கு பசுந்தீவனமான நல்லினப் புல் வெட்டுத் துண்டங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனு சரணையுடன் காராளி செயற்கைமுறைச் சினைப்படுத்தும் நிலை யத்தில் இவை வழங்கப்படுகின்றன. எனவே கால்நடை வளர்ப் போர் இதனைப் பெற்றுக்கொள்ளவும். (05)

## யானைகளின் தொல்லை அதிகரிப்பு

(மல்லாவி)

துணுக்காய்ப் பிரதேசத்தில் யானைகளின் தொல்லை களினால் இப்பிரதேச வாழ்மக்கள் அச்சமடைந்து வருகின்ற னர்.

தொடர்ந்து பகல் வேளைகளில் கொத்தம்பியார் குளம் பாலியாற்றுப் பகுதிகளில் தனியான காட்டு யானை ஒன்று அடிக்கடி வீதிக்குக் குறுக்காக நிற்பதால் இப்பாதையூடாக வருபவர்கள் அச்சமடைந்துள்ளனர். இது போன்று துணுக்காய்க்கும், வேட்டை அடைப்பானுக்குமிடையில் மாலை வேளைகளில் யானைக் கூட்டங்களின் தொல்லை அதிகரித்து வருகின்றது. (24)

## 'பூவரசம் வேலியும், புலுனிக் குஞ்சுகளும்' கவிதைத் தொகுப்பு அவுஸ்.இல் வெளியீடு

கவிஞர் புதுவை இரத்தின துரையின் "பூவரசம் வேலியும், புலுனிக குஞ்சுகளும்" கவிதைத் தொகுப்பு அவுஸ்திரேலியாவின் சிட்னியில் இன்று ஞாயிற்றுக்கிழமை வெளியி டப்படவுள்ளது.

ஹோம்புஸ் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் மாலை 5.30 மணிக்கு இவ்விழா தொடங்குகிறது.சிட்னி வாழ் இலக்கிய ஆர்வலர்கள் இந்த வெளி யீட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்துள் ளனர்.


## மதகுகள் உடைந்தமையால் போக்குவரத்திற்குச் சிரமம்

(முள்ளியவளை)

முள்ளியவளை நாவற்காடு வீதியில் அமைக்கப்பட்ட இரு மதகுகளும் உடைந்துள்ளதால் அவ்வீதியால் செல்லமுடியாது மக்கள் அவலப்பட்டு வருகின்றனர்.

மேற்படி வீதி நாவற்காடு மயானத்திற்குச் செல்லும் முக்கிய பாதை யாகும். அத்தோடு இவ்வீதி நாவற்காடுப் பகுதியிலுள்ள மாணவர்கள் பாடசாலைகளுக்கும், மக்கள் தமது தேவைகளுக்கும் நாளாந்தம் பயன் படுத்திவரும் பாதையாகும். இப்பாதையிலுள்ள உடைப்பெடுத்த மதகுகளை உடனடியாகத் திருத்தம் செய்யுமாறு அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

மேற்படி வீதி உலக உணவுத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு புனர மைப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஆ)



கிளிநொச்சி மாவட்ட திருநெறிக் கழகத்தினால் அண்மையில் நடாத்தப்பட்ட நூல் வெளியீட்டு நிகழ்விலும், திருக்குறள் போட்டி பரிசளிப்பு நிகழ்விலும் கலந்து கொண்ட கிளி.வலயக் கல்விப்பணிப் பாளர் த.குருகுலராஜா, கழக தலைவர் தமிழ் ஐயா மற்றும் கழக உறுப் பினர்களுடன் தங்கப்பதக்கம் பெற்ற திருவையாறு மகாவித்தியாலய மாணவி இ.சுமதி ஆகியோர் நிற்பதனைப் படத்தில் காணலாம். (சோ)

## முல்லை.மாவட்ட தமிழ்ச்சங்கத்தால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் அமைக்கப்பட்ட தமிழ்ச் சங்கம் மாவட்ட நலன்கருதி பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வுள்ளது. முதல் நடவடிக்கையாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள க.பொ.த. உயர்தரவகுப்பு சித்தி யடைந்த மாணவர்களுக்கு வெளி வாரிப்பட்டப்படிப்பில் முதல் பரீட்சை யான பொதுகலைத்தகுதித் தேர்வுக் கான வகுப்புக்களை நடாத்தவுள்ளது.

இதற்கான அறிமுகக் கலந்துரை யாடல்கள் எதிர்வரும் வியாழக் கிழமை புதுக்குடியிருப்பு சிறிசுப்பிர மணிய வித்தியாலயத்திலும், வெள்ளி யன்று முள்ளியவளை வித்தியானந் தாக் கல்லூரியிலும் மு.ப.10 மணிக்கு நடைபெறுமென முல்லை மாவட்ட தமிழ்ச்சங்கத்தலைவர் க.சரவண பவன் அறிவித்துள்ளார்.

இதுவரை வெளிவாரிப் பட்டப் படிப்பிற்குப் பதிந்தவர்களையும், பதிய வுள்ளவர்களையும் இக்கலந்துரை யாடல் கூட்டத்திற்கு தவறாது வயது வேறுபாடின்றி க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த அனை வரையும் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

மேலும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சாதாரண தர சித்தி பெற்றுக்கொண்ட மாணவர்களை திறமைச்சித்தித் தரத்திற்கு உயர்த்தும் வகையில் யூன் மாதம் தொடக்கம் இவ்விரு இடங்களிலும் ஆங்கில பாட புத்தூக்க வகுப்புக்கள் நடைபெற வுள்ளதாகவும் அவர் மேலும் தெரி வித்துள்ளார். (08)

## வட இலங்கைச் சங்கீதசபை செய்முறை பரீட்சை அறிவிப்பு

இவ்வாண்டிற்கான வட இலங் கை சங்கீதசபை செய்முறைப் பரீட்சை எதிர் வரும் 27 ஆம் திகதி தொடக்கம் கீழ்வரும் ஒழுங்கிற் கமைவாக நடைபெறும். விண்ணப் பதாரிகள் தவறாது சமுகமளிக்குமாறு கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப் பாளர் த. குருகுலராஜா அறியத்தரு கிறார்.

பரீட்சை நிலையங்கள்.

சங்கீதம்-கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி, நடனம்- கிளி/கிளிநொச்சி ம.வி., மிருதங்கம்- கிளி/ அழகியற் கலாமன்றம்.

## பூந்தோட்டம் சாந்தசோலை வீதியை புனரமைக்க வலியுறுத்து

(வவுனியா செய்தியாளர்)

மிகமோசமாகப் பாதிப்படைந் துள்ள பூந்தோட்டம்-சாந்தசோலை வீதியைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

பூந்தோட்டத்தில் இருந்து சாந்த சோலை செல்லும் பிரதான வீதி கடந்த பல வருடங்களாகத் திருத்தப் படாமையால் மிகமோசமாகப் பாதிப் படைந்துள்ளது. பெரியார்குளம், தம் பனைச்சோலை, சாந்தசோலை, கொக்குவெளி ஆகிய கிராமங்களில் வசிக்கும் இரண்டாயிரத்திற்கும் மேற் பட்ட குடும்பங்களைச்சேர்ந்த பல்லா யிரக்கணக்கான மக்களின் பிரதான போக்குவரத்துப் பாதை இதுவாகும். தினமும் பல அரச ஊழியர்களும், மாணவர்களும், பொதுமக்களும் பல சிரமங்களுக்கு மத்தியில் இப்பாதை யூடாகவே பயணம் மேற்கொள் வதனால் இப்பாதையை உடனடி யாக புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (10)

## முல்லை.வர்த்தகசங்கத்திற்கு 'கியூடெக்' நிறுவனம் உதவி

(முல்லை)

முல்லைத்தீவு வர்த்தக சங்கத்திற்கு கியூடெக் நிறுவனம் உதவ முன் வந்துள்ளது. கடந்த 12ஆம் திகதி முல்லைத்தீவில் நடைபெற்ற வர்த்தக சங்கத்தின் சிறப்புக்கலந்துரையாடலின்போது கியூடெக் நிறுவனப் பிரதி நிதிகள் கலந்துகொண்டு உதவி வழங்க உறுதியளித்துள்ளனர். இதனடிப் படையில் எதிர்வரும் 19ஆம் திகதி கடன்வழங்கவுள்ளதாகத் தெரிவித் துள்ளனர். சுனாமி அனர்த்தம் நடைபெற்று மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் கியூடெக் நிறுவனம் வர்த்தகர்களுக்கு கடன் அடிப்படையிலாவது உதவ முன் வந்ததையிட்டு முல்லைத்தீவுப் பிரதேச வர்த்தகசங்கத்தினர் நன்றி தெரிவித்துள்ளனர். முல்லைத்தீவு பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதரின் முயற்சியாலேயே இவ்உதவி வழங்கப்படுகிறது. (20)

# அறப்போர் தொடுத்த அன்னையின் நினைவாக...




**தியாக தீபம்** அன்னை பூபதியின் 7 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வின் இறுதி மூன்று நாட்களின் முதலாம் நாள் நிகழ்வுகள் இன்று தமிழீழமெங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

இனவாத சிங்கள அரசிற்கும், இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கெதிராகவும் அகிம்சைப் போராட்டத்தினை நடாத்திய தியாக தீபமான அன்னை பூபதி அவர்களின் நினைவு தின நிகழ்வுகள் கடந்த ஒரு மாதகாலமாகத் தமிழீழ மெங்கும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் பத்தாம் நாள் இந்திய வல்லாதிக்கத்தின் அடக்கு முறை தமிழீழமெங்கும் கட்டவிழ்த்துவிடப்பட்ட நாள். அக்காலப்பகுதியில் மட்டக்களப்பு சத்துருக் கொண்டான் கிராமம் இந்திய கூர்கா படையினரால் சுற்றி வளைக்கப்பட்டுக் குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டு பெண்களின் கற்பு சூறையாடப்பட்டு உடமைகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

மட்டக்களப்பு தன்னாமுனையில் பெண்கள் பராமரிப்பு நிலையத்தில் புகுந்து பெண்களை மிருகத்தனமாக பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினர். அதே போன்று களுவாஞ்சிக்குடி மற்றும் பகுதிகளெங்கும் இந்திய கூர்க்காப் படையினரின் கொடுமைகள் தென் தமிழீழத்தில் கோரத் தாண்டம் ஆடியது. பெண்கள் வீதிகளில் நடமாட முடியாது வீடுகளில் முடங்கினர்.

இதனைக் கண்ணுற்று இனியும் பொறுத்திருப்பதில் பயனில்லை என உணர்ந்து அன்னைபூபதி அவர்கள் தலைமையில் அன்னையர் முன்னணி ஆரம்பிக்கப்பட்டு செயற்பட ஆரம்பித்தது.

இந்திய வல்லாதிக்க அரசின் அதர்மத்தை எதிர்த்து அறப்போர் தொடுக்க அன்னையர் முன்னணி புறப்பட்டது.

மாமாங்கப் பிள்ளையார் ஆலய குருந்தமர நிழலில் சுழற்சி முறையில் உண்ணாவிரதம் மேற்கொண்டனர். இதனைக் கண்ணுற்ற இந்திய இராணுவம் இந்த உண்ணாவிரதத்தினை நிறுத்துவதற்காக தீவிர பிரயத்தனத்தினை மேற்கொண்டனர். சுழற்சி முறையில் உண்ணா நோன்பில் இருந்தவர்கள்பலர் இன்னல்களுக்குள்ளாக்கப்பட்டனர். இந்திய இராணுவத்தின் கொடுமைகள் அரசோச்சியவண்ணம் இருந்தது.

அன்னையர் முன்னணியில் மதவேறுபாடின்றி அனைவரும் ஒன்றிணைந்தனர். சுழற்சி முறை உண்ணாவிரதம், சாகும்வரை உண்ணாவிரதமாக மாற்றப்பட்டு முதலில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க அன்னை பூபதி அவர்கள் முன்வந்த வேளை உண்ணாவிரதத்திற்குப் போட்டி ஏற்பட்டது. இறுதியில் குலுக்கல் முறை மூலம் அன்னம்மா டேவிட் சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பித்தார்.

மாமாங்கப் பிள்ளையார் ஆலய வளாகம் பெண்களால் நிறைந்தன. இந்நிகழ்வைக் குழப்புவதற்காக பல தந்திரங்களை இந்திய இராணுவம் மேற்கொண்டு உண்ணாவிரதமிருந்த அன்னம்மா டேவிட்டைப் பலவந்தமாகத் தூக்கிச் சென்றது.

இந்திய இராணுவத்தினரின் நயவஞ்சக நடவடிக்கை காரணமாக அன்னையர் முன்னணிக்கு ஏற்பட்ட இக்கட்டான நிலையைக் கண்டு ஆவேசங் கொண்டார் அன்னை பூபதி. அன்னையரின் போராட்ட இலட்சியத்தினை வென்றெடுக்க உறுதிபூண்டு சாகும்வரை உண்ணா விரதமிருக்க முன் வந்தார்.

அன்னம்மா டேவிற்றிற்கு நேர்ந்தது போல தனக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என்றவகையில் தனது கைப்படக் கடிதம் எழுதிக்கொடுத்தார். " நான் எனது சுயவிருப்பத்தின் பேரிலேயே எனது கோரிக்கை நிறைவேறும்வரை சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கிறேன். நான் நினைவிழந்து போகும் நிலையிலும் என்னை எனது கணவனோ, பிள்ளைகளோ, உறவினர்களோ காப்பாற்றவோ,தூக்கிச் செல்லவோ முடியாது" எனக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

உண்ணாவிரதத்தைத் தடுத்து மக்கள் எழுச்சியை மழுங்கடித்துவிட்டோம் என்று எக்காளமிட்ட இந்தியப் படைக்குச் சவாலாக 19.03.1988 அன்று மக்கள் உணர்ச்சி வெள்ளத்தில் மிதக்க மாமாங்க ஆலய முன்றலில் உண்ணா நோன்பை அன்னை ஆரம்பித்தார். அன்னையவளுக்கு ஆதரவாக மக்கள் அடையாள உண்ணாவிரதம் ஆரம்பித்தனர்.

அன்னை பூபதியின் அகிம்சைப் போரானது தென் தமிழீழமெங்கணும் மக்கள் எழுச்சிப் போராக வியாபித்தது.

இந்தியப் படைகளின் ஒவ்வொரு முகாம்களும் அன்னையர்களினால் சூழப்பட்டு மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

இந்தியப்படை செய்வதறியாது திணறியது. அன்னை பூபதியின் உண்ணா நோன்பைத் தடுப்பதற்கு வழி தெரியாது தடுமாறியது.

அன்னைபூபதியின் அகிம்சைப் போருக்கு ஆதரவு தெரிவித்து நடைபெற்ற பேரணிகள் இந்தியப்படையினரின் கண்ணீர்ப்புகை, குண்டாந்தடி பிரயோகத்தினால் கலைக்கப்படுகிறது.

அன்னை பூபதியின் உண்ணாவிரதம் பற்றி உலகப் பத்திரிகைகள் மற்றும் வானொலிகள் மூலம்செய்திகள்வெளிவந்தவண்ணம் இருந்தன.

இந்திய இராணுவ அதிகாரிகளினால் உண்ணா நோன்பினை முறியடிக்க மேற்கொண்ட சகல முயற்சிகளும் பயனற்றுப் போயின. 19.04.1988 அன்னைபூபதி அவர்களின் உயிர் உடலை விட்டுப் பிரிகின்றது.

தமிழ்மக்களின் எழுச்சியினையும் விடுதலை வேட்கையினையும் அடக்கிவிட முடியாது என்பதனை அன்னைபூபதி அவர்களின் இறுதி ஊர்வலம் இயம்பி நிற்கின்றது.

அன்னையின் துணிவும், உறுதியும், அற்புதமான தற்கொடையும் இந்திய வல்லாதிக்கத்தை தலைகுனிய வைத்தது. அன்னை பூபதியின் ஒப்பற்ற தியாகமானது தமிழீழப் பெண் இனத்தின் எழுச்சி வடிவமாக

**கனகபுரச்சோதி**

மட்டுமன்றி எம் ஈழவிடுதலைப் போராட்டத்தின் மக்கள் எழுச்சியின் வடிவமாக இன்றும் திகழ்ந்து விளங்குவதை எமது தமிழீழ மண் வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறது என்பதை எம் மண்ணில் நடந்தேறிவருகின்ற வீரதியாக வரலாற்றுச் சாதனைகள் சான்று பகிர்கின்றன.

---

## நோர்வேத்தூதரக அதிகாரிகள் குழு நாளை யாழ். குடாநாட்டுக்கு விஜயம்

இலங்கைக்கான நோர்வே தூதரகத்தின் அதிகாரிகள் குழு ஒன்று நாளை யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்யவுள்ளது.,

நோர்வே நாட்டு நிதி உதவியுடன் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காகவே இக்குழுவினர் யாழ். குடாநாட்டிற்குச் செல்கின்றனர்.

இலங்கைக்கான நோர்வே தூதரகத்தின் சிரேஷ்ட ஆலோசகர் தலைமையில் யாழ். வரும் இக்குழுவினர் நோர்வே அரசினால் யாழ். குடாநாட்டில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த குறை நிறைகளை கேட்டறியும் பொருட்டு பல்வேறு உயர் அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளனர். (33)

## மதுபோதையில் வந்த குழு தாக்குதல் நான்குபேர் வைத்தியசாலையில்

(தென்மராட்சி)

தென்மராட்சியில் உள்ள கேடீஸ் நகர் குடியேற்றத்திட்டத்திற்குள் மதுபோதையில் புகுந்த குழு ஒன்று அங்குள்ள பொதுமக்களைக் கடுமையாகத் தாக்கியதில் நான்குபேர் படுகாயம் அடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழன் இரவு பதினொரு மணியளவில் ஐந்திற்கும் மேற்பட்டோர் இக்குடியேற்றத்திட்டப் பகுதிக்குள் புகுந்து அங்கு இருந்தவர்களைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இத்தாக்குதலில் இக்குடியேற்றத்திட்டத்தைச் சேர்ந்த தனபாலசிங்கம் பாலமோகன்(வயது -25), பரமானந்தராசா (வயது -40) சந்திரகுமார் சுதன் (வயது -15), கந்தையா (வயது -65) ஆகியோர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். (28)

## அனர்த்த முகாமைத்துவ பயிற்சி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கடமையாற்றும் கிராம சேவகர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான அனர்த்த முகாமைத்துவப் பயிற்சி வகுப்புக்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

பதினெட்டுத் தொகுதிகளாக இப்பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன. ஆரம்பக்கட்டமாக மூன்று தொகுதியினைச் சேர்ந்த 180 பேருக்கான பயிற்சிகள் தற்போது முடிவடைந்துள்ளன.

யாழ். அரச செயலகத்தின் ஏற்பாட்டிலான இப்பயிற்சி நெறிதொடர்ந்தும் இடம்பெறும் என அரச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (33)

## சுற்றுச்சூழல் முகாமைத்துவ பணிமனைத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையினரின் ஏற்பாட்டில் நிறுவப்பட்டுள்ள சுற்றுச்சூழல் முகாமைத்துவப் பிரிவின் புதிய பணிமனைத் திறப்பு விழா நாளை மாலை 3.00 மணிக்கு இடம்பெறும்.

யாழ். மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். அரச அதிபர் கே.கணேஸ் மற்றும் இலங்கைக்கான நோர்வே தூதரக அதிகாரிகளும் கலந்து கொள்வர். (33)

## சுனாமி உதவிகள் சரிவரக்கிடைப்பதை மனித உரிமைகள் ஆணைக்குழு உறுதிப்படுத்தும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடந்த கால இராணுவ நடவடிக்கைகளாலும், சுனாமி கடல் அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்டு முகாம்களில் அகதிகளாக வாழும் மக்களுக்கான அரசினதும், ஏனைய அரச சார்பற்ற அமைப்புக்களினதும் உதவிகள் சரிவரக்கிடைப்பதை உறுதிப்படுத்தும் பணியினை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

குறிப்பாக இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களில் கணிசமானோர் போதிய அடிப்படை வசதிகள் ஏதுமின்றியே முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். ஆயினும் இவர்களுக்கான பல்வேறு அடிப்படை வசதிகளும் அரசினாலும், ஏனைய தொண்டரமைப்புகளாலும் வழங்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்ற நிலையில் உண்மைத்தன்மையினை ஆராயவே மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறான உதவிகள் சரிசமமாகப் பகிர்ந்தளிக்கப்படாமையே இந்நடவடிக்கைக்குக்காரணமென சந்தேகிக்கப்படுகின்றது. இது தொடர்பாக ஆராய அண்மையில் குடாநாட்டிற்கு வருகை தந்திருந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழு அகதிகள் வாழும் முகாம்கள் பலவற்றிக்கும் நேரில் சென்று ஆராய்ந்துள்ளது.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான உதவிகள் சரியாகப் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் பணியிலும் ஆணைக்குழு ஈடுபட்டிருப்பதாக அதன் யாழ். அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (27)

## வெடி பொருட்கள் அகற்றப்பட்டது

யாழ். அரியாலைப் பகுதியிலுள்ள புங்கங்குளம் பிரதேசத்தில் "ஹலோட்ரெஸ்ட்" மிதிவெடிகள் அகற்றும் பிரிவினரால் 3459 சதுர மீற்றர் நிலப்பரப்பிலிருந்து வெடி பொருட்கள் அகற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு மிதி வெடி அகற்றப்பட்ட பிரதேசத்தினை "ஹலோட்ரெஸ்ட்" வெடிபொருட்கள் அகற்றும் பிரிவினர் யாழ்.செயலகத்தின் மிதிவெடிகள் செயற்பாட்டு அலுவலகத திடம் கையளித்துள்ளனர். இது விரைவில் பொதுமக்கள் பாவனைக்கு விடப்படவுள்ளது. (33)

ஐந்த மாதத்துடன் சந்திரிகாவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் பூர்த்தியாகிறது. இந்தக் கூட்டணியை அமைத்தது அநுராபண்டார நாயக்கவா, மக்களசமரவீரவா, ஜே.வி.பியா என்று சிந்திக்கும்போது பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

சிலர் கூட்டணி அமைய முக்கிய



ஐ.தே. கட்சியின் அமைச்சரவையை மட்டுமே அவர் வென்றார். இதனை வென்ற பிறகே அவர் பாராளுமன்றத்தைக் கலைக்கக்கூடிய பலத்தைப்பெற்றார். அப்படியில்லா விட்டால் பாராளுமன்றத்தைக்கலைக்க அவர் கனவிலும் நினைத்திருக்க முடியாது இதற்கெல்லாம் காரணம் நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையாகும். ஆனால் ஜே.வி.பி. நிறைவேற்று

பாதுகாப்பின்மையைக் காரணம் காட்டி பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றார். ஒரு நாட்டில் இராணுவம், பொலிஸ்படை மற்றும் ஊடகத்துறையின்றி ஆட்சிநடத்த முடியாது. அதனால் இந்த முக்கிய அமைச்சுக்களை அவர் கைப்பற்றினார். எனினும் அவர் முழுநாட்டையும் வெற்றி கொள்ளவில்லை. ஆக

தருமாறு கோரியபோதும் அவர் கதிர்காமர் மீது இரக்கங்காட்டி அதனைப் பெற்றுக் கொடுக்கவில்லை.

எனினும் இந்தக் கருணைகாட்டல் அவருக்கு பின்நாளில் எரிமலையாகும் என்பதை நினைத்திருக்க முடியாது. ரணிலின் கருணையால் பெற்றுக்கொண்ட இந்தச் சலுகைகளுடன் ரணில் பதவியிலிருந்து தூக்கி எறியபட்டதும் அந்த (பிரதமர்) இடத்துக்கு தான் வந்து விட வேண்டும் எனக் கதிர்காமர் எண்ணியிருந்தார். அதற்கான ரகசிய வேலைகளில் ஈடுபடவே அரசு வாகனங்களையும் வாசஸ்தலத்தையும் கதிர்காமர் பயன்படுத்தினார். அதேபோன்று விடுதலைப்புலிகள்-ரணில் இருவரும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாகும். எனக் கூறிக் கொண்டு இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் செய்தார். அவரின் நோக்கமும் சரியாகவே நிறைவேறியது. இதற்காக கதிர்காமர் ஜே.வி.பியினரின் உதவியையும் பெற்றார். அதன் மூலம் அவர் பிரத

கதிர்காமரும்ஒத்துழைப்பு வழங்கினார்.

சந்திரிகா மூன்று அமைச்சுக்களையும் சுவீகரித்துக் கொண்டு தேசிய அரசாங்கம் அமைப்பது பற்றி ரணிலுடன் பேச்சு நடத்தியபோது கதிர்காமரின் பிரதமர் கனவு கலைந்து விட்டது. பின்னர் மீண்டும் ரணிலின் உதவியைப் பெற்று ஐக்கிய நாடுகளின் செயலாளர் பதவிக்கு சிறிலங்கா சார்பில் போட்டியிட அவரின் பெயரையும் முன்வைத்தார். அதிலும் அவர் தோல்விகண்டார். எனினும் அவருக்கு வழங்கப்பட்ட கடமையை அவர்சரியாகச் செய்தார் ஆனால் அவர்களுக்கான பணி அவர் எதிர்பார்த்தது நடக்கவில்லை பிரதமர் பதவி மகிந்தவுக்குக் கிடைத்தது. கதிர்காமர் பின்னர் சமாதான நடவடிக்கையில் பிரதான பங்குவகிக்க விரும்பினார். ஆனால் அந்தப் பணியும் ஜயந்த தனபாலவிடம் வழங்கப்பட்டது. தனபாலவும் முன்னர் ஐக்கிய நாடுகளின் செயலாளர் பதவிக்கு வேட்பு மனுச் செய்தவரே, அப்போதும் கதிர்காமர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். அந்த வகையில் தற்போதும் அவர்

காலத்தில் அவருக்கு தலையாட்டிப் பொம்மையாக நடித்துக் கொண்டு சந்திரிகா நாட்டின் பாதுகாப்புப் பற்றிக் கிளப்பிய புரளிக்கு ரகசியமாக ஒத்துழைப்பு வழங்கியவர் பலகல்ல ஆகும். நாட்டின் பாதுகாப்பு விடயங்களில் பொறுப்பு வகிக்கும் அவர் சந்திரிகாவின் தேவைக்கேற்றவாறு செயற்பட்டு சந்திரிகா பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்க முக்கிய பங்கு வகித்தார். அதற்குக் காரணம் சந்திரிகா ஆட்சிக்கு வந்ததும் தொடர்ந்தும் இராணுவத்தளபதி பதவியில் நீடிக்கலாம் என்றும் புதிய அரசில்புதிதாக கூட்டுப்படை தலைமையக அதிகாரியாக வரலாம் என்ற நப்பாசையிலாகும்.

எனினும் சந்திரிகா ஆட்சியமைத்ததும் பலகல்லவை பதவிநீக்கி வெளிநாடு ஒன்றில் தூதுவராக பதவி வழங்கினார். எனினும் பலகல்ல சந்திரிகா மீது குறை கூறிக்கொண்டு பதவியேற்றுச் சென்றார்.

இவையே கூட்டணியமைக்க சந்திரிகாவுக்கு உதவியவர்களுக்கு சந்திரிகா வழங்கிய பிரதியுப

# சந்திரிகாவின் தன்னிச்சையான போக்கில் கூட்டணியின் எதிர்காலம்? —


காரணகர்த்தாவாக இருந்தது அநுரா என்கிறார்கள். வேறு சிலர் ஜே.வி.பி இல்லாவிட்டால் சந்திரிகா ஆட்சிக்கு வந்திருக்க முடியாது என்று வாதிடுகின்றனர். காரணம் ஜே.வி.பி யினரே நாடுமுழுவதும் பாரிய பிரச்சாரங்களை மேற்கொண்டு மக்களை விழித்தெழவைத்தனர் என்ற கருத்தைக் கொண்டதினாலாகும் என்றாலும் அவர்களைச்சந்திரிகாவோடு இணைக்க பெரும்பாடுபட்டவர் என்ற வகையில் மங்களசமரவீரவே இதற்குக் காரணம் என்று கூறியவர்களும் இருக்கின்றனர். வேறு சிலர் சந்திரிகாவே இக்கூட்டணி அமைக்க முழுக் காரணம் என்று தெரிவிக்கின்றனர். உண்மையில் சந்திரிகா என்ற தனிநபர் அன்றி அவரது நிறைவேற்றதிகாரமே கூட்டணியமைக்க மூல காரணமாகும்.

ஏனெனில் அவருக்கு நிறைவேற்றதிகாரம் இல்லாதிருந்தால் அவர் ஐ.தே.முன்னணி அரசாங்கத்தின் மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்றிருக்க முடியாது. அந்த வகையில் இன்னும் ஐ.தே. முன்னணியே பதவியில் இருந்திருக்கும்.


அவர் முதலாவதாக நாட்டின்

அதிகார சனாதிபதி முறைக்கெதிராக ஆர்ப்பாட்டம் செய்யாதது ஏன் என்று தெரியவில்லை. ஜே.வி.பி புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்த்தும் மணிராசன் குளத்தில் புலிகள் முகாம் அமைத்தமையை எதிர்த்தும் ஆர்ப்பாட்டம் நடத்தியது. நிறைவேற்றதிகாரத்திற்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்தவில்லை. அதற்காக ஜே.வி.பி ஆதரவு அளித்தது. ஜே.வி.பி. மட்டுமன்றி லக்ஷ்மன் கதிர்காமரும் இதற்கு ஆதரவளித்தார். அந்த வகையில் கூட்டணி அமைக்கக் கதிர்காமரும் காரணமாக இருந்திருக்கிறார்.


கதிர்காமர் மீண்டும் சந்திரிகா அரசு பதவிக்கு வரவேண்டும் என நினைத்தது 1994 முதல் 2001 வரை வகித்த வெளிநாட்டமைச்சர் பதவிக்காக அல்ல. ரணிலின் அரசு காலத்திலும் கதிர்காமர் அவரது உத்தியோக பூர்வவாசஸ் தலத்திலேயே இருந்து அரசசுகபோகங்களை அனுபவித்தே வந்தார். இது ரணிலின் துணையிலாகும். ரணில் கதிர்காமருக்கு ராஜமரியாதையை வழங்கி வந்தார். ரணிலின் அரசாங்கத்தில் வெளி விவகார அமைச்சராக இருக்கும்போது டிரோன் பர்னாண்டோ உத்தியோகபூர்வ வாசஸ் தலத்தைத் தமக்குப் பெற்றுத்



கதிர்காமர்



விமல்வீரவன்ச



லயனல் பலகல்ல

மராகும் ஆவலையும் கொண்டிருந்தார். ஜே.வி.பி யும் கதிர்காமரே பிரதமராக வேண்டும் என்று விரும்பினர். அதனை மகிந்தராஜபக்ஷ பிரதமராகப் பதவியேற்கும் போது பகிரங்கமாகவும் தெரிவித்தனர்.

கதிர்காமர் ஜே.வி.பி யினரை ஆதரித்தது பிரதமராக வர வாய்ப்பை ஏற்படுத்தவன்று. கூட்டணியின் பின்னர் ஜே.வி.பி யினரின் சொற்படி சந்திரிகா நடவடிக்கை எடுக்கலாம் என்ற கருத்திலாகும்.

எவ்வாறாயினும் கதிர்காமரின் விருப்பப்படி மூன்று அமைச்சுக்களையும் கையேற்க சந்திரிகாவுக்கு

களிருவருக்கும் சற்று முரண்பாடு காணப்பட்டது. தற்போது வெளிநாட்டிலிருந்து தனபாலவை சந்திரிகா வரவழைத்து சமாதானச் செயலராக பதவி அமர்த்தியுள்ளார். எனவே கூட்டணியமைத்து சந்திரிகா ஆடசியதிகாரத்துக்கு வர கதிர்காமர் செய்த உதவிக்கு சந்திரிகா செய்யும்பிரதியுபகாரம் இவ்வாறு இருக் கின்றது.

கூட்டணியமைத்து சந்திரிகா ஆட்சிக்குவர வேறுவழியில் உதவி புரிந்தவர் ஒருவரும் இருக்கின்றார். அவர் முன்னாள் இராணுவத் தளபதியான லயனல் பலகல்ல என்பவராகும். ரணிலின் ஆட்சிக்

காரங்களாகும்.

தற்போது ஒருவருடப் பூர்த்தி

**உப்புள் ஜோசப் பர்ணாந்து (லங்காதீப) தமிழில். வடிவேல்**

யைக் கொண்டாடியதும் பல முக்கிய பிரமுகர்களின் வரவின்மையுடனேயே அதனை வேறு விதமாகக் கூறினால். விருப்பமின்மை என்ற காரணத்தினாலேயே. எனவேகூட்டணி அமைத்தவர்களே அதனை முறிக்கவும் காரணமாக அமையலாம் என்பதே உண்மை.

## "மே" முதல் வாரத்தில் முக்கியசட்ட மீளமைப்புக்கள் பாராளுமன்றில் சமர்ப்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதத்தின் முதல் வாரத்தில் முக்கிய சில சட்ட மீளமைப்புக்கள் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் சமா்ப்பிக்கப் படவுள்ளன.

இதற்கான தீர்மானம் அண்மையில் நடைபெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. மே மாதம் மூன்றாம் திகதி குற்றங்கள் சம்பந்தமான சட்டமீளமைப்புப் பிரேரணையும், குற்றங்கள் சம்பந்தமான விசேட சரத்துக்களை உள்ளடங்கிய பிரேரணையும் சமர்ப்பிக்கப் படவுள்ளன.

குற்றங்கள் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட ஒருவரை 24 மணி நேரம் தடுத்துவைப்பது உட்பட்ட விடயங்கள் இந்த விசேட பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை எதிர்வரும் மே மாதம் நான்காம் திகதிவெடி பொருட்கள் சம்பந்தமான மீளமைப்புப் பிரேரணையும் பாராளுமன்றத்தில் சமா்ப்பிக் கப்படவுள்ளன. (32)

## பொதுமக்களைத் தாக்கிய ஆறு பொலிசார் பதவி நீக்கம்

(கொழும்பு)

திஸ்ஸாமரகம பகுதியில் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்திய ஆறு சிறிலங்காப் பொலிசார் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதல் சம்பவம் வியாழன் இடம்பெற்றுள்ளது.

சாதாரண பிரச்சினை ஒன்று தொடர்பில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் இதன்போது பொலிசார் அதிகளவான பலப்பிரயோகத்தை மேற்கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்தின்போது குழந்தை ஒன்று உட்பட 10 பேர் வரை காயமடைந்தனர்.

## அம்பாறையில் ஆர்ப்பாட்டக்காரரின் கல்வீச்சுக்கு இலக்காகிப் பொலிசார் ஒருவர் காயம்

அம்பாறை மாவட்டம் மருதமுனையில் நேற்றுமுன்தினம் மாலை பொதுமக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின்போது இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கல் வீச்சிற்கு இலக்காகிக் காயமடைந்துள்ளார்.

அப்பிரதேசவாசியான சட்டத்தரணி இஸ்மாயில் ஆரிப்பைத் தலைவராகக் கொண்ட லைசோ அமைப்பின் ஏற்பாட்டில் சுமார் 55 லட்சம் பெறுமதியான தொழில் உபகரணங்கள் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிவாரண உதவிகளைப் பெறும் வாய்ப்பை பெற்றிராதவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போது ஏற்பட்ட பதற்ற நிலையை தவிர்ப்பதற்காக பொலிசார் ஆகாய வேட்டுக்களை தீர்த்து கூட்டத்தைக் கலைத்தனர்.

***இந்த நிலையில்*** நாங்கள் குழப்பமடைந்து போய் இருக்கமுடியாது. அதனால் எங்களைச் சுதாகரித்துக்கொண்டு அடுத்தகட்டமாக மேற் கொள்ளவேண்டிய வேலைகளில் தீவிரமாக இறங்கினோம்.

நாங்கள் அங்கு நின்று நிலைமைகளை ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தபொழுது அரச செயலகத்துடன் இணைந்து செயற்படும் போராளிகள் மனித இழப்புத் தொடர்பான கணக் கெடுப்பொன்றைச் செய்து என்னிடம் தந்தார்கள்.

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

மூவாயிரம் பேருக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருப்பதாக அந்தக் கணக்கெடுப்பில் கூறப்பட்டிருந்தது. உடனடியாகச் செய்யப்பட்ட அந்தக் கணக்கெடுப்பை நம்பவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாமல் இருந்தது. இந் தக் கணக்கெடுப்பு மிகைப்படுத்தப்பட்டது என் கின்ற பார்வைதான் எனக்குள் இருந்தது.

முல்லைத்தீவின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு நிலையில் இருந்தது. சில இடங்

மக்களை அந்தக் கடலே காவுகொண்டுவிட்ட வேதனையான, துயரமான ஏற்றுக்கொள்ள முடியாதநிலைதான் அப்போது எனக்கிருந்தது .

ஒரு தாய் தான் உணவூட்டிச் சீராட்டி வளர்தத தனது பிள்ளையைத்தன்கையால் பலிஎடுத்து விட்ட துன்பமான-கொடுமையான, வேதனை மிகுந்த செயலைப் போல கடல் இரக்கமின்றி துயரமான செயலைச் செய்து முடித்திருந்தது.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு மீட்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் மேற்கொள்வது என்ற நிலைக்கு வந்தோம். அதனால் இதுவரை நடந்த எழுந்த வாரியான நடவடிக்கைகளை நிறுத்தி நிதித் துறையின் வாணிப நடவடிக்கையில் ஈடுபட்டி ருக்கும் பாபுவை மீட்பு நடவடிக்கையின் பொறுப் பாளராக நியமித்தோம்.

அதேபோல தள அமைப்புப் பகுதிப் பொறுப் பாளராக இருக்கின்ற மணிமாறன் மீட்பு நட வடிவத்தில் தான் ஒவ்வொரு பிரிவுக்கும் மீட்பு நடவடிக்கைகளைப் பிரித்துப் பிரித்துக் கொடுத் திருந்தோம்.

இந்த நடவடிக்கைகளுக்காக தளபதி ஜெயத்தினுடைய அணி, அண்ணையின் பாது காப்பு அணி, மருத்துவப் பிரிவு, கணினிப்பிரிவு, அரசியல்துறை, சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு, மட்டு- அம்பாறை, ரமேசின் படையணி, காவல் துறை அணி, கடற்படை மகளிர் அணி,அரசியல்துறை, புலனாய்வுத்துறை, உந்துருளிப்படையணி, கட்டளைப் பணியகம், பல்கலை மாணவர்கள், வன்னிவேளாண் பகுதி உடபட இயக்கத்தின் ஒட்டுமொத்தமான பிரிவுகள் அனைத்தும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டன.

ஆரம்பத்தில் உடல்களை மீட்கின்ற நட வடிக்கைகளுக்குப் பாதுகாப்பு அங்கிகள் எவை யும் வழங்கவில்லை. பின்னான நாட்களில் தான் நோய்த்தொற்று ஏற்படாமல் இருப்ப தற்கான நடவடிக்கைகளை மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் றேகா,தர்மேந்திரா,விக்கி டொக்டர் உட்பட வவுனியாவில் இருந்து வந்திருந்த வைத் தியர்கள் எனப் பலதரப்பட்டவர்கள் மேற் கொண்டிருந்தனர்.

உறவினர்கள் அடையாளம் காண்ப தற்காக அனுப்பிக் கொண்டிருந்தோம்.

எங்களது சமூகத்தில் மரணச் சடங்கு எவ்வளவு பெறுமதியானதாக இருந்தது. யாராவது ஒருவர் மரணித்தால் அவரின் வீட்டில் அனைவரும் ஒன்றாகக் கூடி உடலுக்கு அஞ் சலி செலுத்துவர், இப்படியாக நாம் கொடுக் கின்ற மரியாதை உயர்வானது. ஆனால் அன் றைய தினம் உடல்கள் குவியல் குவியலாக குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள். ஆண்கள் என்ற வேறுபாடு இல்லாமல் இருந்தபோது மனித உயிர், உடல்கள் பெறுமானம் இல்லா திருந்தது

கடற்கரையில் இருந்து அலை வருவதைக்



***முல்லைத்தீவின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு நிலையில் இருந்தது. கடல் நீர் மட்டம் நெஞ்சளவிலும்–இடுப்பளவிலுமாக கூடிக்குறைந்தபடி இருந்தது. கட்டடங்கள் கற்குவியலாய் இருந்தன. மனித உடல்களையும், கடலையும் பார்க்கின்ற பொழுது வேதனையாய் இருந்தது. கடலை நம்பி வாழ்ந்து கடலால் உயர்ந்த மக்களைக் கடலே காவுகொண்ட வேதனையான, துயரமான சம்பவத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. ஒரு கட்டத்தில் சம்பவத்தையும்–சம்பவத்தின் தன்மையையும் மீட்பு நடவடிக்கை பற்றியும் அண்ணைக்குச் சொன்னேன். அண்ணை தனது பாதுகாப்புப் பிரிவில் இருந்த போராளிகளைக் கூட மீட்பு நடவடிக்கைக்காக அனுப்பியிருந்தார். அனைத்துப் பிரிவினரும் வந்து வேலைகளைப் பொறுப்பேற்றுத் தாமே செய்து கொண்டிருந்தனர். கரையோரப் பிரதேசத்திலே பிறந்து கரையோர நிலத்திலே வாழ்ந்த இந்த மக்கள் நீச்சல் தெரியாமல் வாழ்ந்துவிட்டார்கள். அதனால்தான் பெரும் மனித இழப்பு ஏற்பட்டது. சுனாமிப் பேரலைகளின் கோரத்தில் சிக்கி உயிரிழந்து போனவர்களின் உடல்களையும், உருக்குலைந்து போனநகரின் கட்டடங்களையும் அகற்றுகின்ற பெரும்பணியை ஒழுங்குபடுத்தி செயற்படுத்திய தமிழீழ கடற்படை சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள் எம்மிடம் பகிர்ந்த அவரின் அனுபவம் இன்றைய பகுதியிலும்***

# கடலை நம்பி வாழ்ந்து உயர்ந்த மக்களை கடலே காவுகொண்டுவிட்டதை ஏற்கமுடியாமல் இருந்தது

களில் கடல் நீரின் மட்டம் கழுத்தளவிலும், இடுப்பள விலுமாக இருந்தது. கட்டடங்கள் ஒவ்வொரு கோலத்தில் இருந்தன.

அதிகமான கட்டடங்களுக்கு அத்திவாரக் கட்டு மாத்திரமே இருந்தது. சில அதுவும் இல்லா மல் கிடந்தன. ஒருசில கட்டடங்கள் மாத்திரம் சுவர்களுடன் இருந்தன.

இப்படியே ஒவ்வொன்றாய் பார்த்தபடி வண் ணாங்குளம் பகுதிக்குப் போனோம். அங்கு கடலைத் தவிர வேறு எதுவும இருக்கவேயில்லை. கள்ளப்பாட்டின் நிலையும் அப்படித்தான் இருந் தது. கடல் நீருக்குள் அங்கும் இங்குமாக சடலங் கள் கிடந்தன.சடலங்களையும், கடலையும் பார்க்கின்ற பொழுது வேதனையாக இருந்தது. கடலை நம்பி வாழ்ந்து கடலால் உயர்ந்த



வடிக்கைக்கான தேவைகளைப் பூர்த்தி செய் வதற்கும், நிதித்துறை வழங்கல்பகுதிப் பொறுப் பாளர் ரூபன் உணவு ஒழுங்குபடுத்தல், லோறன்ஸ் வாகன ஏற்பாடு போன்ற வேலைகளை ஒவ்வொரு வராகப் பொறுப்பேற்று உடனடியாகவே தமக் குரிய வேலைகளைத் துரிதமாகச் செய்து கொண்டிருந்தனர்.

முதலில் மக்களையும் இணைத்து வேலை களைச் செய்துகொண்டிருந்தோம். ஆனாலும்

**பகுதி 53**

அந்த நடவடிக்கைகள் வெற்றியடையவில்லை. மக்கள் பொதுவான நோக்கில் அல்லாமல் தங்கள் உறவினர்கள் என்ற பார்வையில் செயற்பட்டுக்கொண்டிருந்தார்கள். அதனால் இன் னும் நிறையப் போராளிகளை ஈடுபடுத்த வேண் டிய தேவை ஏற்பட்டது.

இந்த நிலையில் சம்பவத்தின் தன்மை பற்றியும் மீட்புவேலைகள் பற்றியதுமான தக வலை அண்ணைக்குத் தெரியப்படுத்தி மேல திகமான,போராளிகள் தேவை என்ற தகவலையும் தெரிவித்தேன். அண்ணைக்குச் சொன்னவுடன் அண்ணை தனது பாதுகாப்பு அணியில் இருந்த போராளிகள் உட்பட மேலதிக போராளிகளையும் அனுப்பியி ருந்தார்.

அண்ணை அனுப்பின போராளிகள் வந்து சேர்ந்தவுடன கடல் காவுகொண்ட நகரப்பகு தியின் ஆறு கிலோ மீற்றருக் கும் அதிகமான நீண்ட பிரதேசங் களை வரைபடமாக்கி ஒவ் வொரு பிரிவிற்கும் ஒவ்வொரு பகுதியை வழங்கினோம்.

ஒரு இராணுவத்தளத்தை நாங்கள் எப்படி இறங்கித் தாக்கி முற்றுமுழுதாக அடித்துக் கைப்பற்றி முழுமையாக மீட்பது என்ற சண்டை

நிதித்துறையினரின் வாணிப நடவடிக்கை வாகனங்கள், கனரக வாகனங்கள் எனப் பெரு மளவான வாகனங்கள் எரிபொருட்கள் என்பன தேவைக்கேற்ற அள வில் வந்திருந்தன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,



தமிழீழ நிர்வாக சேவை என்பவற்றை மக்களைப் பராமரிக்கின்ற நடவடிக்கைக ளுக்கும், மீட்கப்படுகின்ற உடல்களை அடக்கம் செய்கின்ற வேலைகளுக்கும் நியமித்தோம். அவர்களுடன் இணைந்து சில கிராமசேவகர்க ளும் கடுமையாக உழைத்தனர். கிராமசேவகர்

**அ.லோகீசன்**

சேந்தன் கடுமையாக உழைத்தார்.

இப்பிடி இருக்க ஆரம்பத்தில் மீட்பு நட வடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போராளிகளுக்கு கைக்கிளவுஸ், மூக்குக்கு கட் டக் கூடியமாதிரி மாஸ் எதுவும் இருக்கவேயில்லை. அதனால் கைக்குட்டைகளாலும் இருக்கிற வளங்களாலும் மூக்கைக் கட்டிக்கொண்டு வெறுங் கையால்தான் உடல்களை மீட்டோம். இவ்வாறு மீட்கப்படுகின்ற உடல்கள் எல்லாவற் றையும்

கண்டு நகருக்குள் இருந்தவர்கள் எல்லோரும் பயந்து போய் றவுண்டப்போட்டடியால் முள்ளியவளைப் பக்கம் நோக்கி ஓடிப்போயிருக்கி றார்கள் அவர்களை றவுண்டப் போட்டடிக்கு நேராக வந்த கடல் அப்படியே அள்ளிக் கொண்டு போய் பின்னால் இருக்கிற தாள் நிலப் பகுதிக் குள் அமத்திவிட் டது.

இப்படித்தான் பலர் இறந்துபோயி ருக்கிறார்கள். கரையோரப் பிர தேசத்திலே பிறந்து கரை யோர நிலத்தி லேயே வாழ்ந்து வந்த இந்த மக்கள் நீச்சல் தெரியாமல் வாழ்ந்து விட் டார்கள். கடற் றொழில் சமூகம் கடலோடு வாழ்கின்ற மக்கள் என்று சொன்னாலும் கூட நீச்சல் அனுபவம் அற்றவர்களாகத்தான் பலர் வாழ்ந்திருக்கிறார்கள் அனைவரும் நீச்சல் தெரிந்தவர்களாக இருந்திருந்தால் உயிரிழந்த வர்களில் ஐந்நூறு முதல் ஆயிரம் பேர் வரையானவர்களைக் காப்பாற்றி இருக்கலாம்.

சுனாமி அலைகள் வேகமாகத் தாக்கிய முல்லைத்தீவு மகாவித்தியாலயத்துக்கு அருகில் எங்களது மகளிர் போராளிகளின் முகாம் ஒன்று இருந்தது. அங்கு அவயவங்களை இழந்த போராளிகள் உட்பட பதின்மூன்று பேர் வரையிலா னவர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு நீச்சல் அனுபவம் இருந்ததால் அதிலிருந்து தப்பித் துக்கொள்ள முடிந்தது.

மீட்பு நடவடிக்கையை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த தமிழீழகடற்படைசிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்களின் அனுபவம் அடுத்த பகுதியிலும்.

தொடரும்....

# சாவு அறிவித்தல்



## அமரர் கலாநிதி

# திரு.செல்லையா சிவசாமி

## (சமாதான நீதவான்)

புங்குடுதீவு 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு மருதானையினை வசிப்பிடமாகவும், வவுனியா நெளுக்குளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல தொழிலதிபரும், சமாதான நீதவானுமாகிய கலாநிதி திரு.செல்லையா சிவசாமி (உரிமையாளர் லலிதா றேடிங்கம்பனி கிளிநொச்சி, சிவசாமி அன் கம்பனி கொழும்பு, ராங்வியு, கோட்டல் கிளிநொச்சி) அவர்கள் 12.04.2005 செவ்வாய்க்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலம்சென்ற செல்லையா, செல்லம்மா (கனடா) தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், லலிதாம்பிகையின் அன்புக் கணவரும், திலகவதி (கனடா), நடனசபாபதி (கனடா), இராஜசிங்கம் (எயாலைன் ரேடன் கொழும்பு, காலஞ்சென்ற மங்கயற்கரசி, தவமணிதேவி (கனடா), ஞானசீலன் (கனடா), குணசீலன் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரனும், பரிமளபவானி (கனடா), செல்வகுமார் (சுவின் எக்கீட் கம்பனி), சிவகுமார் (லலிதா பல்பொருள் வாணிபம்), தமிழ்ச்செல்வி (லண்டன்), லலித்குமார் (பழையமாணவன் கொழும்பு றோயல் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறிஸ்கந்தராஜா (கனடா), சசிகலா (கொழும்பு), இரஞ்சலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமானாரும், அருணன் (கனடா), அற்புதன் (கனடா) கீர்த்திகா (கனடா), ஷேஷான் (கொழும்பு),சுபானு (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு பொரளை ஜயவர்த்தன மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 17.04.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

**தகவல்:-**
**(மனைவி, பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்)**

(சி.11642)

# இந்தியாவில் முஷாரப் கிரிக்கெட் பார்க்கும் விளையாட்டரங்கம் பூரணபாதுகாப்பில்


## - விமானப் பறப்பிற்கு முற்றாகத் தடை



*பாகிஸ்தான் – இந்திய கிரிக்கெட் அணிகளுக்கிடையில் இன்று நடைபெறும் ஒருநாள் போட்டியையடுத்து போட்டி நடைபெறும் புதுடில்லியிலுள்ள பெரோசாகோட்லா விளையாட்டரங்கிற்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது பாக். சனாதிபதி முஷாரப் இப்போட்டியை பார்வையிடவுள்ளமை காரணமாகவே இப்பாதுகாப்பு ஏற்பாடுகள்ஆகும்.*

இப் போட்டியை பாகிஸ்தான் அதிபருடன் இந்திய பிரதமர் மன்மோகன்சிங்கும் பார்வையிடுகிறார் இதனை முன்னிட்டு விளையாட்டரங்குக்கு மேலால் விமானங்கள் உலங்குவானூர்திகள் பறப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டிருப்பதுடன் இவ்அறிவித்தல் பகிரங்கமாக அனைத்துத் தரப்பினருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அரங்கைச் சுற்றி விமானஎதிர்ப்பு ஏவுகணைகள் பொருத்தப்பட்டிருக்கிறது மற்றும் விளையாட்டரங்கைச் சுற்றி அதிகளவிலான தரைப்படையினர் குவிக்கப்பட்டுத் தீவிர சேதனைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இப்பாதுகாப்பு ஏற்பாடுகள் மூன்று வளையமாக மேற்கொள்ளப்படுகிறது அது தவிர முஷாரப் தங்கவுள்ள விடுதியும் பாதுகாப்பு படையினரின் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.



கிரேக்க நாட்டு அரண்மனை வடிவில் அமைக்கப்பட்டுள்ள தஞ்சை மண்டல திமு.க.மாநாட்டுத் திடலின் முகப்புத் தோற்றம்.

# வருடத்திற்கு 55ஆயிரம் இந்தியருக்கு மட்டுமே அமெரிக்கா வரஅனுமதி

## - அமெரிக்க அமைச்சர்

அமெரிக்காவில் வேலை கோரி ஆண்டுக்கு ஐந்து லட்சம் இந்தியர்கள் விண்ணப்பிக்கிறார்கள் என அமெரிக்காவின் போக்குவரத்துத்துறை அமைச்சர் நார்மன் ஒய்மினடா கூறியுள்ளார்.

அண்மையில் இந்தியாவிற்கு சென்றுள்ள அவர் அங்கு கூறுகையில், விண்ணப்பிக்கும் ஐந்து லட்சம் இந்தியர்களில் சுமார் 55 ஆயிரம் பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுகிறது ஏனெனில் அமெரிக்க நாட்டு சட்டப்படி அமெரிக்கா வரவிரும்புவர்களை நேர்முகத் தேர்வுக்கு அழைக்க அனுமதிக்க வேண்டியிருக்கிறது. இவ் நேர்முகத்தேர்வை நடத்துவதற்குப் போதுமான அதிகாரிகள் இல்லை. இதன் காரணமாகவே அமெரிக்காவிற்கு செல்லவிருக்கும் இந்தியர்களின் தொகையை அதிகரிக்க முடியாமல் இருக்கிறது. என்றார்.

## 24 கைதிகள் விடுதலை

இந்திய அரசாங்கம் நல்லெண்ண நடவடிக்கையாக பாகிஸ்தானைச் சேர்ந்த 24 கைதிகளை விடுதலை செய்துள்ளது. இதற்கு முன் பாகிஸ்தான் அரசு 564 இந்தியக் கைதிகளை விடுதலை செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஜனார்த்தனனுக்கு சிறை

(சென்னை)

முன்னாள் தமிழக பால்வளத்துறை அமைச்சராக இருந்த ஜனார்த்தனனுக்குச் சொத்துக்குவிப்பு வழக்குத் தொடர்பாக இரு ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 1991ஆம் ஆண்டு தொடக்கம் 1996ஆம் ஆண்டுவரை ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் பால்வளத்துறை அமைச்சராக இருந்த ஜனார்தனனுக்கு வருமானத்திற்கு அதிகமான சொத்துச் சேர்த்த குற்றச்சாட்டின் பேரிலேயே இச். சிறைத் தண்டனை வழங்கப்பட்டதாகத் தெரிகிறது.

## சுனாமியைக் கண்டறியும் அபூர்வ ஆமை மீட்பு

சுனாமியை கண்டுபிடிக்கக்கூடிய அபூர்வக்கடல் ஆமையை ஐந்து (5) லட்சம் இந்திய ரூபாய்களுக்கு விற்க முயன்றவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஆமையும் மீட்கப்பட்டது

இந்திய உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த நபரிடம் பல வர்ண கடல் ஆமைகள் இருப்பதையறிந்த காவல்துறை அவ்வாமைகளை ஆய்வு செய்தபோது அதில் சுனாமி, மற்றும் பூமியில்நடைபெறும் மாற்றங் களை அறியவல்ல ஒருஆமையென் கண்டு பிடிக்கப்பட்டது. இவ் ஆமையை விற்பதற்கு ஐந்து லட்சம் இந்திய ரூபாய்கள் விலை பேசியிருந்தபோதும் அதன் விலை 20 லட்சம் இந்திய ரூபாய்களைத்தாண்டும் என ஒருவல்லுனர் தெரிவித்தார்.

## கஸ்தூரி ரங்கனுக்கு ஆர்யபட்டா விருது

இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் கஸ்தூரி ரங்கனுக்கு 2003ஆம் ஆண்டுக்கான ஆர்யபட்டா விருது வழங்கப்படுகிறது.

விண்வெளித்துறையில் சிறப்பாகப் பணியாற்றியமைக்காக 'ஏரோனாட்டிகல் சொசைட்டி ஆப் இந்தியா' வால் இவ்விருது வழங்கப்படுகிறது. இவருடன் விருது வாங்கவுள்ள மற்ற வல்லுனர்கள் ஐதராபாத் ராணுவப்பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் சோதனை மைய இயக்குனர் ஆர். என்.பட்டாச்சார்ஜி. திருவனந்தபுரம் திரவ எரிபொருள் தொழில் நுட்ப மைய இணை இயக்குனர் கே.ஜி. நாயர், ஐ.எஸ்.ஆர்.ஓ. சாட்லைட்மைய இணை இயக்குனர் என்.கே.மாலிக் உட்படப் பலரும் அடங்குவர். விரைவில் நடைபெறவுள்ள விழாவில் இவ்விருது வழங்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டிருக்கிறது.




சென்னை அடையாறில் இடம்பெற்ற இலவச தமிழ் மென்பொருள் கருவிகளை தி.மு.க தலைவர் கருணாநிதி வெளியிட்டு வைத்தபோது..

# பீகாரில் நாள்தோறும் 3 பேர் கற்பழிக்கப்படுகிறார்களாம்

இந்தியா பீகார் மாநிலத்தில் நாள்தோறும் மூன்று கற்பழிப்புச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. இங்கு இரண்டு மணி நேரத்துக்கு ஒரு கொலை நடக்கிறது.

பீகார் மாநிலத்தில் 2004 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் டிசம்பர் வரை பதிவான குற்றங்கள் பற்றிய விபரத்தை பீகார் காவல்துறை நேற்று முன்தினம் வெளியிட்டது. அதன்படி கடந்த ஒரு ஆண்டில் மட்டும் ஒரு இலட்சத்து பதினையாயிரத்து இருநூற்றுப்பதினாறு வழக்குகள் பதிவாகியிருக்கின்றன.

கடந்த ஒரு ஆண்டில் மட்டும் 3,816 கொலைகள் நடந்திருக்கின்றன. அதாவது கிட்டத்தட்ட இரண்டு மணி நேரத்துக்கு ஒரு கொலை நடக்கிறது.

கடந்த ஆண்டு 1,297 கொள்ளைச் சம்பவங்களும், 9,199 சூறையாடல் சம்பவங்களும், 2,977 பெண் கடத்தல்களும், 411 பணத்துக்கான ஆள் கடத்தல்களும் நடந்துள்ளன. 1,063 கற்பழிப்புச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. அதாவது ஒரு நாளில் 3 கற்பழிப்பு நடைபெறுகிறது என அறிவித்திருக்கின்றது.



# தீவிரவாதத்தை ஒடுக்க விசேடசட்டம் தேவை

## -ஜெய்லலிதா வற்புறுத்து

பொடா சட்டம் ரத்துச் செய்யப்பட்டு விட்டதால் தீவிரவாதத்தை ஒடுக்க விசேட சட்டம் தேவை என்று முதல்-மந்திரிகள் மாநாட்டில் தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா வற்புறுத்தியுள்ளார்.

இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் உள்ள உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து விவாதிக்க புதுடில்லியில் நேற்றுமுன்தினம் அனைத்து மாநில முதல்-அமைச்சர்களின் மாநாடு நடந்தது. அங்கு பேசிய ஜெயலலிதா தொடர்ந்து கூறுகையில்,

பொடா சட்டத்தை ரத்துச் செய்ததன் மூலம் பயங்கரவாதத்தை ஒடுக்க மாநில அரசுகளுக்கு இருந்த அதிகாரங்கள் பறிக்கப்பட்டு விட்டதாக நாங்கள் கருதுகிறோம். பயங்கரவாதத்துக்கு எதிரான நம்முடைய போரில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை ஒருவிசேட சட்டம் மூலம் நிரப்பவேண்டும்.

நக்சலைட்டுகளால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு வழங்கப்படும் விசேட உதவிகளை ஆந்திரா, கர்நாடக ஆகிய மாநிலங்களோடு பொதுவான எல்லைகளை கொண்ட தமிழ் நாடு போன்ற மாநிலங்களிலுள்ள மாவட்டங்களுக்கும் வழங்கவேண்டும். எனவும் கேட்டுக்கொண்டார்.


# எம் அணையா விளக்கின் ஆறாம் ஆண்டிலே!...



| விழுதாக | | வித்தாக |
|---|---|---|
| 05 | | 17 |
| 07 | | 04 |
| 1975 | | 1999 |

**அருணா தவராசா**
**(வீரவேங்கை நிதர்சனா)**

ஓர் ஆலில் தோன்றிய விழுதே
எம் மண்ணின் விடுதலைக்கு
களத்தில் **வீறு** கொண்ட
வீராங்கனையாய் **ஏறு** நடைபோட்டு
இறுதிவரை **பீறு** போல்
பெருவீரத்தில் **மாறு** கொள்ளாது
மண்ணின் விடுதலைக்கு மடிந்த
எம் மங்கை விழுதே
என்றும் உன் நினைவுடன்

த.முகவரி:-
த.நாராயணன்,
மாவட்ட வைத்தியசாலை,
முல்லைத்தீவு.

• நி.முகவரி:-
"ராஜாஸ் வாசம்"
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

**அம்மா,**
**பெரியண்ணா,**
**சின்னண்ணா, தம்பி,**
**அண்ணிமார்,**
**மருமகன்கள்.**

(6051)

# 06 ஆம் ஆண்டு நீங்காத நினைவுகளுடன்...



*தாயின் மடியில்:– 12.07.1972*

*தாயக மண்ணில்:– 17.04. 1999*

**மேஜர் சேந்தன்/ றெஜினோல்ட்**
**அகஸ்ரின் ஞானமணி–சுரேஸ் செல்வன்**
**காங்கேசன்துறை–யாழ்**

தமிழ் ஈழம் மீட்கும்
பணியில் பதியின்
அணியில் புலியின்
வடிவில் பரணி எழுதிய
புயலே!
அலையின் வடிவில்
நுளையும் பகைக்கு
உலையின் வடிவம் நீயே
அலையும் மக்கள்
துயரில் கலந்து
சரிதம் ஆன கலையே– உன்
நினைவில் கலந்த
உறவுகள் மனத்தின்
சிலையில் எழுதிய எழுத்தே.

**இந்நாளில் இவருடன் வீரச்சாவடைந்த மேஜர்–கவியாலன், கப்டன்– மறைசெல்வன் ஆகியோரை நினைவு கூருகின்றோம்.**

தகவல்:- எ.றெக்சன்
(சகோதரன்)

(5830)



டில்லிப் போட்டியைக் காண பாகிஸ்தானிலிருந்து வந்த ரசிகர்களை வாகா எல்லையில் இந்திய பாதுகாப்புப் படையினர் சோதனையிடுகின்றனர்.

## கடைசி ஒருநாள் போட்டி இந்திய அணியில் மாற்றமில்லை

டில்லியில் இன்று இந்தியா-பாகிஸ்தான் இடையேயான ஆறாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நடக்கிறது. இந்தப் போட்டிக்கான இந்திய அணியில் மாற்றம் எதுவும் இல்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது போட்டிக்கான அணி அப்படியே இந்தப் போட்டியில் விளையாடும் என்று இந்திய கிரிக்கெட் சபை செயலாளர் எஸ்.கே. நாயர் அறிவித்துள்ளார். எனவே அணித்தலைவர் கங்குலி இந்தப் போட்டியிலும் ஆடமாட்டார்.

## வெற்றிக்கான பெருமை அனைத்தையும் எனது வீரர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்


இந்தியாவுக்கு எதிரான வெற்றிக்கான பெருமை அனைத்தையும் என்னுடைய அணி வீரர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன். தன்னம்பிக்கை,கடின உழைப்பு இவை தான் எங்களுக்குப் பலனைக் கொடுத்திருக்கின்றது. நம் மீது நமக்கு நம்பிக்கை இருக்க வேண்டும் அப்போது தான் வெற்றி பெற முடியும்.

246 ஓட்டங்களை இந்திய அணி முதலில் எடுத்திருந்தபோது அதை எளிதாக நாங்களும் எடுத்து விட முடியும் என்று நான் நினைக்க




வில்லை. ஆனால் அப்ரிடி மிகத் திறமையாக ஆடி வெற்றிக்கு அடிக்கல் அமைத்துக் கொடுத்து விட்டார். எங்களுடைய பாரத்தை வெகுவாகக் குறைத்து விட்டார். அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். 17 ஆம் திகதி டில்லியில் கடைசி ஒரு நாள் போட்டி நடக்கிறது. இரு அணிகளுக்குமே இந்தப் போட்டி பரபரப்பான போட்டி யாரும் இன்னும் தொடரைக் கைப்பற்றவில்லை என்பதால் இந்த இறுதிப் போட்டி விறுவிறுப்பாக அமையும். கான்பூர் போட்டியில் எப்படி திறமையை வெளிப்படுத்தினோமோ அதைப் போல டில்லியிலும் விளையாடுவோம்.

எங்களுடைய நாட்டு அதிபர் முஷாரப், இந்திய அதிபர் மன்மோகன்சிங் இருவரும் டில்லி போட்டியைக் காண வருகிறார்கள். எனவே இரு அணி வீரர்களும் பொறுப்புடன் விளையாட வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். கங்குலி கான்பூர் போட்டியில் விளையாடவில்லை. இது ஒரு வித்தியாசமான அனுபவம். ராவிட்டும் நன்றாகவே புத்திசாலித்தனமாக அணித் தலைவர் பொறுப்பை செயற்படுத்துகிறார் என்றார்.



இன்சமாம்

# கடைசிப் போட்டி டில்லியில் இன்று தொடரை சமன்செய்யுமா இந்தியா?



இந்திய- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான ஆறாவது மற்றும் கடைசி ஒரு நாள் போட்டி டில்லி பெரோசா கோட்லா மைதானத்தில் இன்று நடைபெறுகிறது.

தொடர்ந்து மூன்று ஆட்டத்தில் தோற்றதால் இந்திய அணி நெருக்கடியில் தவிக்கிறது. தொடர் தோல்வியால் இந்திய வீரர்கள் மீது ரசிகர்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

தொடரை சமன் செய்ய நாளைய ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டிய கட்டாயம் இந்திய அணிக்கு உள்ளது. பாகிஸ்தான் அணிக்கு எந்த வித நெருக்கடியும் இல்லை. தோற்றாலும் அந்த அணி கவலைப்படவேண்டியதில்லை. ஏனென்றால் தொடரை இழக்காது. இந்திய அணி இன்றைய ஆட்டத்தில் தோற்றால் தொடரை இழந்து விடும். தொடரை சமன் செய்வதற்காக இந்திய வீரர்கள் அனைவரும் கடுமையாக போராட வேண்டியுள்ளது.

சாதாரணமாக பாகிஸ்தான் வீரர்கள் சிறப்பாக ஆடுவார்கள். இன்றைய ஆட்டத்தை அந்நாட்டு அதிபர் முஷாரப் பார்க்கிறார். இதனால் அவர்களது ஆட்டத்தில் கூடுதல் அதிரடி இருக்கும். இந்திய அணியை விட பாகிஸ்தான் அணிக்கு இது கூடுதல் பலமே.

நேற்று முன்தின ஆட்டத்தில் இந்திய வீரர்களின் பந்து வீச்சு மிகவும் மோசமாக இருந்தது. வேகப்பந்து, சுழற்பந்து என்று யாரையும் அப்ரிடி விட்டு வைக்கவில்லை. அணித்தலைவர் அனுபவம் பதவி ராவிட்டுக்கு குறைந்த அளவிலே இருந்தது. இன்றைய ஆட்டத்திற்கு அவரே தலைவராக இருப்பார். கங்குலி ஆடமாட்டார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது.



தொடர்ந்து மூன்று போட்டியில் வென்றதால் பாகிஸ்தான் வீரர்கள் புத்துணர்ச்சியுடன் உள்ளனர். அந்த அணி துடுப்பாட்டம் பந்து வீச்சில் சம பலம்பெற்றுள்ளது. அப்ரிடி, சல்மான்பட், இன்சமாம், சோயிப் மாலிக், யுகானா, ரசாக் ஆகியோர் துடுப்பாட்டத்தில் நல்ல நிலையில் உள்ளனர். பந்து வீச்சில் ரானா நவீத் தொடர்ந்து முத்திரை பதித்து வருகின்றார். இன்றைய ஆட்டத்தில் இப்திகார் நீக்கப்பட்டு முகமது சமி இடம் பெறுவார். இதே போல அர்சத்கானுக்கு பதிலாக டேனிஷ்கனிரா இடம் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அணித்தலைவர் பொறுப்பை தற்காலிகமாக ஏற்றுள்ள ராவிட்டுக்கு தொடரை சமன் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. வெற்றி பெற்றால் அவருக்குத் தொடர்ந்து அணித்தலைவர் வாய்ப்புக் கிடைக்கலாம். இரு அணிகளும் இன்று மோதுவது 101 ஆவது போட்டி ஆகும். இதுவரை நடந்த 100 ஆட்டத்தில் இந்தியா 35 போட்டியிலும், பாகிஸ்தான் 61 போட்டியிலும் வெற்றி பெற்றுள்ளன. 4 ஆட்டம் முடிவு இல்லாமல் நிறைவு பெற்றது.

## விசாரணையின் முடிவு சாதகமாக அமையும்




கங்குலி

தடையை எதிர்த்து முறையீடு செய்துள்ள கங்குலி சாதகமான முடிவுக்காகக் காத்திருக்கிறார். இவரது முறையீடு குறித்து மைக்கேல் பெலாப் விசாரணை நடத்துகிறார்.

இந்த விசாரணையின் முடிவு தனக்கு சாதகமாக அமையும் என கங்குலி நம்பிக்கை தெரிவித்துள்ளார். தடையை எதிர்த்து முறையீடு செய்துள்ளேன். எல்லாம் சாதகமாக முடியும் என நம்புகிறேன். டில்லி போட்டிக்கு தேர்வு செய்யப்படுவது குறித்து எதுவும் தெரியாது. இது தேர்வாளர்களின் கையில் உள்ளது. அவர்கள் எடுக்கும் முடிவுக்கு கட்டுப்படுவேன். சர்வதேச கிரிக்கெட்டுக்கு விரைவாகத் திரும்புவேன். ஒவ்வொரு சர்ச்சையின்போதும் நான் அவ்வளவுதான் என விமர்சிப்பார்கள். பின்னர் மீண்டும் அணிக்குத் திரும்பி பதிலடி கொடுத்துள்ளேன். இதற்கான மன வலிமை என்னிடம் உள்ளது. அணியின் ஆதரவும் உள்ளது. அணிக்குத் திரும்பும் போது நிச்சயமாக ஓட்டம் குவிக்க முயல்வேன் என்றார் கங்குலி.

## வீனஸ் அதிர்ச்சித் தோல்வி



பேமிலி சர்கிள் கோப்பை டென்னிஸ் தொடரில் வில்லியம்ஸ் மூன்றாவது சுற்றில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். 'அமெரிக்காவின் சார்லஸ்டன் நகரில் இத்தொடர் நடக்கிறது. கடந்த வியாழனன்று நடந்த மூன்றாவது சுற்றுப் போட்டியில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், பிரான்சின் தாதியானா கலோவினை எதிர்த்து விளையாடினார். இதில் 17 வயதான கலோவின் 7-5, 6-4 என்ற நேர் செட்களில் வீனசை வீழ்த்தினார். காலிறுதியில் இவர் ரஷ்யாவின் நாதியா பெட்ரோவைச் சந்திக்கிறார்.

மற்றொரு போட்டியில் பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின் 6-2, 6-3 என்ற செட்களில் [illegible] குடியரசின் இவேடா பெனிசோவாவை [illegible] காலிறுதிக்கு முன்னேறினார்.

## இருபாலாருக்குமான பூப்பந்து போட்டி கிளிநொச்சியில் சிறப்புற நிறைவு

புதுவருடத்தை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவில் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான பூப்பந்தாட்டப் போட்டி 13.04.2005 தொடக்கம் கிளி. இளையோர் செயற்பாட்டு நிறுவன மைதானத்தில் மின் ஒளியில் நடைபெற்றது. மேற்படி போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் ஆண், பெண்களுக்கான அரையிறுதி, இறுதிப் போட்டிகள் நடைபெற்றன.

ஆண்களுக்கான ஒற்றையர் இறுதிப் போட்டிக்கு தர்சன், பிரசன்னா தெரிவு செய்யப்பட்டு முதலாம் இடத்தினை தர்சனும், இரண்டாம் இடத்தினை பிரசன்னாவும், ஆண்களுக்கான இரட்டையார் ஆட்டத்தின் இறுதிப் போட்டிக்கு தர்சன் - குலரமணன் பிறேமதாசன், முகுந்தன் தெரிவு செய்யப்பட்டு முதலாம் இடத்தினை தர்சன், குலரமணன் ஆகியோரும், இரண்டாம் இடத்தினை பிறேமதாசன், முகுந்தன் ஆகியோரும் பெற்றுக்கொண்டனர்.

அத்துடன் பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தின் இறுதிப் போட்டியில் திலகாவை எதிர்த்து விளையாடிய செல்வி. சாந்தரூபி முதலாம் இடத்தையும், திலகா இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்வானது தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் அ. இன்பன் தலைமையில் இடம்பெற்றது. பரிசளிப்பு நிகழ்வில் பெண்களுக்கான வெற்றிக் கிண்ணத்தையும், பணப்பரிசினையும் தமிழீழ விளையாட்டுத் துறைச் செயலாளர் அன்ரன் அன்பழகன் வழங்கிக் கௌரவித்தார். ஒற்றையர் ஆட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு பிரதீப்பும், ஆண்களுக்கான இரட்டையர் ஆட்ட வீரர்களுக்கான வெற்றிக் கிண்ணத்தையும், பணப்பரிசினையும் தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி. பாப்பாவும் வழங்கி வீரர்களைக் கௌரவித்தனர்.

மேற்படி போட்டிக்கு நடுவர்களாக குமார், பரம்சோதி, கனகரட்ணம், றோயல் பியசீலன் ஆகியோர் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (சோ)


## இங்கிலாந்தின் அண்டர்சன் திறமைகாட்ட நம்பிக்கை



[illegible]ன்னாபிரிக்காவுடனான [illegible]டியில் பந்து [illegible] திறமை காட்டாத [illegible]ங்கிலாந்து அணி[illegible]ந்து நீக்கப் பட்ட [illegible]ஸ் அண்டர் சன் கவுண்டி போட்டி களில் திறமையை வெளிப்படுத்த முடியும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார். அவர் அண்மையில் லங்கா சயர் அணிக்காக பந்து வீசி ஆரம்ப சுற்றில் சொமசெட் அணிக்கெதிராக 11 ஓவர்களில் 11 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றியிருந்தார். அவர் இது பற்றி கூறும்போது, மீண்டும் கவுண்டி அணியில் ஆடுவது மகிழ்ச்சியளிப்பதாகவும், இதற்காக எதுவித பயிற்சியிலும் ஈடுபடவில்லை என்றும் தெரிவித்ததுடன் வலையில் பயிற்சி செய்வது சுலபம் என்றாலும் போட்டிகளுக்கும் பயிற்சிக்கும் வேறுபாடு இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அண்டர்சன் சிம்பாப்வேயுடனான போட்டியின் போது 73 ஓட்டங்களை கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார். அண்மைய கவுண்டி போட்டியில் அவரின் திறமை யைப் பயிற்றுவிப்பாளர் ரொய்கூலி பாராட்டியுள்ளார்.

## சிந்தனைக்கு



உண்மையில் எமது மக்களின் பாரிய உயிரிழப்பிற்கும் அவர்களின் உடைமை நாசத்திற்கும், சிங்கள ஆளும் வர்க்கத்தின் இனவெறிபிடித்த,தலைவர்களே பொறுப் பேற்க வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 17-04-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## வர்த்தகர்கள் போல்...!

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணிக்குள் நிலவும் உறவு/ உடன்பாடு கூட்டணி சேர்ந்துள்ள கட்சிகள் இடையில் நிலவும் உறவா? அன்றி இரு வர்த்தக நிறுவனங்கள் இடையில் நிலவும் உறவா? என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது. ஏனெனில் ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் இரு பிரதான கட்சிகளும், ஆட்சியில் பங்கு வகிக்கும் இரு கட்சிகள் போன்று நடந்து கொள்வதில்லை. சிலவேளைகளில் எதிர்க்கட்சிகள் போன்றும் பல வேளைகளில் வர்த்தக நிறுவனங்கள் இடையிலான உடன்பாடுகள் போன்றதாகவே அவற்றின் நடவடிக்கைகள் உள்ளன.

இந்தவகையில் இறுதியாகப் பேரம் பேசுவதற்கு உள்ளாகியுள்ள விடயமானது சுனாமி அனர்த்தம் மீள்கட்டுமானப் பணிக்கெனச் சர்வதேச நாடுகளினால் வழங்கப்படும் நிதி உதவிகளைப் பங்கீடு செய்வது தொடர்பான பொதுக்கட்டமைப்பு உருவாக்குதல் தொடர்பானதாகும். அதாவது இதுவரை இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த ஜே.வி.பி தற்பொழுது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் பேரம் பேசத் தொடங்கியுள்ளது.

சுனாமி அனர்த்த மீள் கட்டுமானப் பணிக்கான பொதுக்கட்டமைப்பு அவசியமானது என்பதைச் சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆகையினால் அத்தகையதொரு கட்டமைப்பின் அவசியத்தை சிறிலங்கா அரசாங்கத்திற்கும் அவை வலியுறுத்தி வருகின்றன. இந்நிலையில் சிறிலங்கா அரசாங்கத்தால் இதனை முற்றாகப் புறக்கணித்து விடமுடியாததொரு நிலையே உள்ளது.

ஆகையினால் சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்புத் தொடர்பான தீர்க்கமானதொரு நிலைப்பாட்டிற்கு வர வேண்டியதொரு நிலையே நிலவுகின்றது. இத்தீர்மானமானது பொதுக்கட்டமைப்பை ஏற்பதாகவும் இருக்கலாம். நிராகரிப்பதாகவும் இருக்கலாம். ஆனால் நேரடியாக நிராகரிப்பதென்பது தற்போதைய சூழ்நிலையில் சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க அரசாங்கத்திற்கு அனுகூலமானதாக இருக்கமாட்டாது.

இந்நிலையில் தான் பொதுக்கட்டமைப்பை ஏற்பது தொடர்பான பேரம் ஜே.வி.பியால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதாவது பொதுக் கட்டமைப்பை ஆதரிப்பதற்கு ஜே.வி.பி தனது நிபந்தனைகளை முன்வைத்துள்ளது. இதன் பிரகாரம் பொதுக்கட்டமைப்பானது ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீள் கட்டுமானப் பணிக்கான சர்வதேச நிதியுதவிகளைக் கையாள்வதற்காக மட்டும் இருத்தல் வேண்டும்.

அடுத்து, இதற்குச் சட்ட அங்கீகாரமோ பாராளுமன்ற அங்கீகாரமோ பெறப்படுதல் கூடாது. விடுதலைப்புலிகள் சிறிலங்கா அரசாங்கத்தினருடன் இணைந்து சர்வதேச பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்துதல் கூடாது என்பனவையே ஜே.வி.பி யின் நிபந்தனைகளாகும்.

ஜே.வி.பி இத்தகைய நிபந்தகைகள் ஊடாகப் பொதுக் கட்டமைப்பிற்குப் பச்சைக்கொடி காட்டத் தயாராகியுள்ளமை ஒன்றும் ஆச்சரியம் தரத்தக்கதல்ல. ஏனெனில் ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்ற பின்னர் அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கான பேரங்களில் ஈடுபட அது தயாராகி விட்டது என்பது ஏற்கனவே உணரப்பட்டதொன்று தான்.

மேலும் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இரு எச்சரிக்கைகளை ஜே.வி.பி க்கு விடுத்திருத்தல் கூடும். இதில் ஒன்று பொதுக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படாது போன பாராளுமன்றம் கலைக்க வேண்டியதாக இருக்கும். அடுத்ததாக பொதுக்கட்டமைப்பு நிதி கிடைக்காது போனால் அரசாங்கத்தை நடத்த முடியாது போகும் என்பதாகும்.

இந்நிலையில் ஜே.வி.பி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் இணக்கப்பாட்டிற்கு வந்திருத்தல் அவசியமானதாகியது. ஏனெனில் சனாதிபதி சந்திரிகா விடுத்துள்ள எச்சரிக்கையானது ஜே.வி.பி அனுபவிக்கும் ஆட்சி அதிகாரத்திற்கே உலை வைக்கத்தக்கது. ஆகையினால் சனாதிபதி சந்திரிகாவுடன் பேரம் பேசுதல் ஒன்றுடன் இணக்கப்பாட்டிற்கு வர ஜே.வி.பி முற்பட்டுள்ளது.

ஜே.வி.பி இத்தகைய இணக்கப்பாட்டிற்கு வருவதென்பது எதிர்பார்க்கமுடியாததொன்றல்ல. ஏனெனில் ஜே.வி.பி யினால் ஆளும் கட்சியில் இருந்து எத்தகைய முரண்பாடான பேச்சுக்களை மேடையிலும், ஊடகங்கள் மத்தியிலும் தெரிவித்திருப்பதும் ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதில் அது குறியாகவே இருந்துள்ளது.

இந்த நிலையில் பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் இல்லையேல் ஆட்சி அதிகாரம் இல்லை. சிலவேளை ஆட்சி அதிகாரம் தான் இருப்பினும் அரசாங்கத்திடம் நிதியில்லை என்ற நிலையில் ஜே.வி.பி யினால் எவ்வாறு அரசாங்கத்தைத் தொடர்ந்து அச்சுறுத்தவும், மிரட்டவும் முடியும். அதிகாரத்திற்காகவே சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் விட்டுக்கொடுப்புக்களுடன் உடன்பாடு கண்ட ஜே.வி.பி இவ்விடயத்தில் மட்டும் எவ்வாறு முறித்துக்கொள்ளும்...? ஏன் முறித்துக்கொள்ள வேண்டும்.?

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தீவகத்தில் கண்டனப்பேரணிக்கு ஏற்பாடு

(தீவகம்)

வடக்கு கிழக்கில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் அடாவடித்தனமான செயற்பாடுகள் மற்றும் இடம் பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளை உரிய முறையில் தீர்க்காமை உட்பட மற்றும் பல விடயங்களையும் முன்வைத்து மாபெரும் கண்டனப் பேரணியொன்று எதிர்வரும் வியாழக்கிழமை தீவகத்தில் இடம் பெறவுள்ளது.

தீவகக் கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கண்டனப் பேரணி அன்று காலை 10.00 மணிக்கு வேலணை துறையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் முன்பாக இருந்து ஆரம்பமாகி வேலணைப் பிரதேச செயலாளர் அலுவலகத்தைச் சென்றடைந்து அங்கு சனாதிபதிக்கான மகஜர் கையளிக் கப்படும்.

இது சம்பந்தமான அறிக்கை ஒன்றை பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இடைக்கால தன்னாட்சி அதிகாரத்தை வழங்காமல் இழுத்தடிப்புச் செய்து வருவது, கிழக்கில் இடம் பெற்று வரும் விடுதலைப்புலிப் போராளிகள் மீதான படுகொலைகள், உலர் உணவு நிவாரணவெட்டு, ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தலில் இழுத்தடிப்பு, மீளக்குடியமர்ந்த மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடியாமல் இராணுவ நெருக்கடிகள் தொடர்வது, சுதந்திரமான கடற்றொழிலுக்கு கடற்படைகள் இடையூறு போன்ற விடயங்கள் தொடர்பாக சிறிலங்கா ஆட்சியாளர்கள் கடைப்பிடித்து வரும் பேரினவாதப் போக்கை கண்டித்து தவகத்தில் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்றை நடாத்த அனைத்து தீவகங்களின் பொது அமைப்புக்கள் முடிவு செய்துள்ளன.

தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை புறந்தள்ளி வரும் சிறிலங்கா ஆட்சியாளர்களைக் கண்டித்து நடைபெறும் இந்த மாபெரும் கண்டனப்பேரணியில் அனைத்துத் தொழிலாளர்கள் நிவாரண வெட்டால் பாதிக்கப்பட்ட பொது மக்கள், அனைத்து பொதுஅமைப் புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் தவறாது கலந்து கொண்டு தமது நிலைப் பாட்டை சர்வதேச சமூகத்திற்கு தெரியப்படுத்துமாறு தீவகக்கோட்ட பொது அமைப்புக் களின் ஒன்றியம் அறைகூவல் விடுத்துள்ளது. (41)

# மன்னாரில் கனிய எண்ணைவள ஆய்வுக்கு நிபுணத்துவ நிறுவனங்களிடம் கேள்வி மனு

(கொழும்பு)

மன்னார் கடற்பரப்பில் கனிய எண்ணை வளம் இருப்பது தொடர்பில் மேலதிக ஆய்வுகளை மேற்கொள்வதற்கு எண்ணை உற்பத்தி தொடர்பில் நிபுணத்துவம் பெற்ற நிறுவனங்களிடம் கேள்விமனுக்கள் கோரப்படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இது தொடர்பில் கருத்து வெளியிட்ட இலங்கை கனியவளங்கள் தொடர்பான நிறுவனத்தின பணிப்பாளர் டைட்டஸ் ஜயவர்தன: இலங்கையின் மன்னார் கடற்பரப்பில் கனிய எண்ணை வளம் இருப்பது தொடர்பில் நடத்தப்பட்ட அடிப்படை மட்ட ஆய்வுகள் முடிவடைந்துள்ளன. அதன் இறுதி அறிக்கையை தயாரிப்பதற்கு குறிப்பிட்ட பிரதேசத்திலிருந்து எடுக்கப்பட்ட மண் மற்றும் வேறுபல சான்றுகள் அவுஸ்திரேலியாவின் பர்க் நகரில் அமைந்துள்ள ஆய்வுகூடம் ஒன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அடுத்த ஜுன் மாதமளவில் அந்த அறிக்கைகள் கிடைத்ததன்பின் கேள்விமனுக்கள கோரப்படும் என இலங்கை கனிய வளங்கள் தொடர்பான நிறுவனத்தின் பணிப்பாளர் டைட்டஸ் ஜயவர்தன தெரிவித்தார். (32)

# மீளக்குடியேறிய மக்களிடம் படையினர் விபரம் சேகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் மைலந்தனைப் பகுதியில் மீளக் குடியேறிய மக்களின் பெயர் விபரங்களைப் படையினர் சேகரிப்பதாக அந்த மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். கடந்த தொண்ணூறுகளில் மைலந்தனையில் மேற்கொள்ளப்பட்ட பாரிய படுகொலையை அடுத்து அங்கிருந்து இடம்பெயர்ந்து சென்ற மக்கள் சமாதான முயற்சிகளை அடுத்து மீண்டும் அங்கு குடியேறி வாழ்ந்து வருகின்றனர். ஏற்கனவே இந்த மக்கள் யுத்தத்தால் பெரும் பாதிப்புக்களுக்குள்ளான நிலையில் படையினரின் தற்போதைய விபரச் சேகரிப்பினால் அச்சத்திற்குள்ளாகி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(32)

# பொலிஸ் அத்தியட்சகரை இழுத்துக்கொண்டு பாதாளக் குழுத் தலைவர் களனி கங்கையில் குதிப்பு

(கொழும்பு)

கொழும்பு கடுவெல பிரதேசத்தில் பாதாள உலகக் குழுவினரைச் சுற்றி வளைத்து கொழும்பு பொலிசார் கைது செய்தபொழுது பிரதி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரை இழுத்துக் கொண்டு பாதாள உலக குழுத் தலைவர் ஒருவர் களனி கங்கையில் குதித்துள்ளார்.

இதனை அடுத்து ஏனைய பொலிசார் களனி கங்கையில் குதித்து இந்த இருவரையும் மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். ஆயினும் பாதாள உலக குழுவைச் சேர்ந்தவரை மரணமான நிலையிலேயே பொலிசார் மீட்டனர். கொலன்னாவைச் சேர்ந்த ரகிக குமார (வயது - 27) என்ற பாதாள உலக குழுவைச் சேர்ந்த தலைவர்களில் ஒருவரே. இவ்வாறு மரணமடைந்துள்ளார். ஆயினும் களனி ஆற்றினுள் பாதாள உலக சந்தேக நபரால் இழுத்துச் செல்லப்பட்ட பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

# இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் ஐந்து கல்லூரி அதிபர்கள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

கொழும்பில் பிரபலம் வாய்ந்த ஐந்து கல்லூரிகளின் அதிபர்கள் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் பேரில் பதவி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலைகளில் மாணவர்களை இணைப்பது தொடர்பாக அதிபர்கள் இலஞ்சம் பெற்று வருவதாக பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் பட்டிருந்தன.

இதனை அடுத்து இது தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக சனாதிபதியினால் விசேட ஆணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது. இந்த ஆணைக்குழு தற்போது தமது விசாரணைகளை நடத்தி வருகின்றது. இதனடிப்படையிலேயே இந்த ஐந்து கல்லூரிகளின் அதிபர்களும் தற்போது ஆணைக்குழுவினால் இடைநிறுத்தப் பட்டுள்ளனர்.

இந்த விசேட ஆணைக்குழுவிற்கு தென் பகுதியிலுள்ள 120 கல்லூரி களின் அதிபர்கள் தொடர்பாக இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன தொடர்ந்தும் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

# பேரழிவுக்கண்காணிப்பு கட்டமைப்பில்லை; "பவ்ரல்" அமைப்பு அரசு மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

இயற்கை பேரழிவுகளை கண் காணிப்பதற்கு சிறிலங்காவில் இது வரை கட்டமைப்பு எதுவும் அமைக்கப் படவில்லை என "பவ்ரல்" அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கிங்ஸ்லி ருத்திரு குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி சுனாமி கடல் கொந்தளிப்பால் பல்லாயிரக் கணக்கானவர்கள் இறந்துள்ளது டன் கோடிக்கணக்கான சொத்துடமைகள் கடல் கொந்தளிப் பால் அழிக்கப்பட்டுள்ளன.

இது போல் மீண்டும் பூமி அதிர்வுகளும் கடல்கொந்தளிப்புக் களும் ஏற்பட்டவண்ணமுள்ளன. ஆகவே இவைகளை கண்காணிப் பதற்கு இந்நாட்டில் இயங்க பேரழிவுக்கட்ட மைப்பு அமைப்பது மிக அவசியம் இதுவரை கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் எந்த முயற்சிகளும் மேற்கொள்ள வில்லை. இது ஒரு துர்அதிர்ஸ்ட வசமான செயலென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

–லீவு வழங்க மறுத்ததால் கோபமடைந்த சிப்பாய்–

# அதிகாரிகள் மீது துப்பாக்கிச் சூடு இராணுவ மேஜர் உட்பட மூவர் பலி

சாவகச்சேரி நகரையண்டிய நுணாவில் வைரவ கோவிலடி இராணுவ முகாம் பகுதியில் இன்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மேஜர் தரபடை அதிகாரியொருவர் உள்ளிட்ட மூன்று படையினர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இவ் அசம்பாவிதத்தில் சக படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாக கூறப்படும் மற்றோர் படைச் சிப்பாய் சாவகச்சேரி பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், நுணாவில் பகுதியில் கண்டி வீதியோர வைரவ கோவிலடிப் பகுதியில் இலங்கை இராணுவத்தின் 52ஆவது படைப்பிரிவின் 6ஆவது சிங்கரெஜிமண்ட் படைத்தளம் அமைந்துள் ளது. காலை 10.40 மணியளவில் குறித்த படைச்சிப்பாய் ஊர் சென்று வருவதற்காக லீவினை படை அதிகாரிகளிடம் கோரியுள் ளார். எனினும் அக் கோரிக்கையை அப்படை அதிகாரிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. தொடர்ந்து தனது லீவுகள் நிராகரிக்கப்பட்ட தால் கோபமுற்ற படைச்சிப்பாயே அப்படை அதிகாரிகள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற் கொண்டுள்ளார்.

இதனிடையே சம்பவ இடத்திற்கு நேரில் விஜயம் செய்த சாவகச்சேரி நீதவான் பா.சுப்பிரமணியம் மரண விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலங்களைச் சொந்த ஊர்களிற்கு அனுப்பி வைக்கவும் உத்தரவிட்டுள்ளார்.

ஆயினும் சக படையினரைக் கொன்றதற்காக குறிப்பிடப்படும் படைச்சிப்பாய் தொடர்ந்தும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (27, 33)

## உந்துருளிகள் ஒன்றுடனொன்று மோதியதில் மூவர் படுகாயம்

விசுவமடுப்பகுதியில் நேற்று மாலை இடம் பெற்ற வீதிவிபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர். உந்துருளிகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்ட போதே இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் காயம் அடைந்தவர்கள் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இவ்விபத்தில் ஆர்.மரியநிக்ஷன் (வயது-24) முல்லைத்தீவு, சிவா (வயது-20) செல்வபுரம், ஜெயஆவன் முல்லைத்தீவு (வயது 43) ஆகியோரே படுகாயமடைந்தவர்கள் ஆவர். (08)

## மினிபஸ்–உந்துருளி விபத்தில் ஒருவர் பலி மினிபஸ்சிற்கு பொதுமக்கள் தீவைப்பு

–யாழ்ப்பாணம்–இருபாலையில் சம்பவம்




யாழ்.பருத்தித்துறை வீதியின் கோப்பாய்-இருபாலை பகுதியினில் இன்று இடம் பெற்ற மினிபஸ் உந்துருளி விபத்தில் சிக்கி பொதுமகன் ஒருவர் உயிரிழந்துள்ளார். சம்பவத்தையடுத்து திரண்ட பொது மக்களால் குறித்த மினிபஸ் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. தடுக்க வந்த பொலிசார் கல்வீச்சுக்கு உள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருகையில் "முகமாலையிலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு குறித்த மினிபஸ் கைதடி கோப்பாய் வீதியூடாக யாழ்.நகர் நோக்கிப் பயணித்த வேளையே இருபாலைப்பகுதியில் குறித்த உந்துருளியுடன் விபத்திற்குள்ளாகியுள்ளது. வீதியைக் கடக்க முற்பட்ட வயோதிபரை ஒருவர் விபத்திற்குள்ளாவதிலிருந்து காப்பாற்ற முற்பட்ட வேளையிலேயே குறித்த உந்துருளியை மினிபஸ் மோதியுள்ளது.

உந்துருளியைச் செலுத்தி வந்த நபர் தப்பித்து விட்ட போதிலும் பின்னால் அமர்ந்திருந்த தேவராசா உதயகுமார் (வயது-26) என்பவர் உயிரிழந்துள்ளார். இந்நிலையில் கோபமுற்று திரண்ட இருபா லையைச் சேர்ந்த இளைஞர்கள் குறித்த மினிபஸ்ஸிற்கு தீவைத்த னர். அவ்வேளையில் குறித்த மினிபஸ்ஸின் கீழ் சிக்குண்டிருந்த உந்துருளியும் தீப்பற்றி எரிந்துள்ளது.

இதனைத் தடுக்க முற்பட்ட பொலிசார் மீதும் கல்வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சம்பவம் பிற்பகல் ஒரு மணியளவில் இடம் பெற்றதாக கூறும் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.ஸ்ரீசெல்வம், தாம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கிறார். (27,33)

### நினைவுக்கல்...

முன்னதாக இன்று இவரின் திருவுருவப்படம் அவரின் தற்காலிக இடமான இராமநாதபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை பிற்பகல் 2.00 மணிக்கு வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் வீரவணக்க நிகழ்வு இடம்பெறும்.

### ஆனந்த....

தாக்குதல்களை நடத்துவது மற்றும் பதற்ற சூழல் ஒன்றை தோற்றுவிப்பது போன்ற நடவடிக்கைகளில் இந்தக் குழுவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது.

### பி.செயலாளர்...

பிரதேசத்தில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்ட தனது உத்தியோபூர்வ வாசஸ்தலத்திற்கு உந்துருளியில் திரும்பிக் கொண்டிருக்கையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பிரதேசமெனக் கருதப்படும் திருக்கோவிலில் உந்துருளியில் சென்ற இருவரால் இவர் சுடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவத்துடன் இரண்டு பேர் தொடர்புபட்டிருப்பதாக காவற்துறையின் விசாரணைகளின் போது தெரிய வந்துள்ள போதிலும் இது வரை எவரும் கைது செய்யப்பட்டவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

## பி.செயலரின் கொலை குறித்து விசாரிக்க 3 பொலிஸ் குழுக்கள்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலர் தவராசா இனந்தெரியாதோரால் நேற்று முன்தினம் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு மூன்று பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக அம்பாறை பிரிவிற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சரத் ஜெயசுந்தர தெரிவித்தார்.

இவர் குறுக்கு வீதியொன்றினூடாக வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே இனந்தெரியாதோர் துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும் திருக்கோவில் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கலைப்பட்டதாரியான தவராசா மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். இவரது சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்ட அதேவேளை மேலதிக விசாரணைகள் இடம் பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இக்கொலைச் சம்பவத்தை அரசாங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுல் படுத்தப்பட்ட நிலையில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக்கட்டியெழுப்பும், மற்றும் நிவாரணம் வழங்கும் வேளையில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதை அரசாங்கம் கண்டிப்பதாகவும் இந்தக் கொலையுடன் தொடர்புடைய நபர்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையும், அவசர உதவி நடவடிக்கைகளையும் மதிக்கவில்லையென்பது தெளிவாக இருப்பதாக அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### ஐ.பாராளுமன்ற....

இந்தக் கலந்துரையாடலில் தமிழீழத்தில் மக்கள் சுனாமியால் எதிர்கொண்டுள்ள மனிதாபிமான நெருக்கடிகள் குறித்தும் அதிலிருந்து மக்களைக் காப்பாற்றி புனர்நிர்மாணத்தை மேற்கொள்ள அவசியமான பொதுக் கட்டமைப்புக்கள் பற்றியும் அரசியல்துறைப் பொறுப்பாளர் எடுத்து விளக்கினார்.

பொதுக்கட்டமைப்பு ஆக்கபூர்வமானதாக சர்வதேசத்தின் உதவியை பாரபட்சமற்ற நேர்மையான முறையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கக்கூடிய வகையில் அமைவது முக்கியமானது. இதைச் செய்து காட்டுவதில் சிறிலங்கா அரசாங்கம் எடுக்கும் சரியான நடவடிக்கையே அதன் நன்மதிப்பையும் நேர்மைத்தனத்தையும் அத்தோடு பேச்சுவார்த்தை மூலம் தமிழர் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குள்ள அதற்குள்ள எண்ணத்தை வெளிப்படுத்தும் என்று கூறிய அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவை சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழர் பிரதேசத்திற்கு அனுப்பிவைத்து சேதங்களை மதிப்பீடு செய்ய முயற்சிக்க வேண்டும். அத்துடன் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வு இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கு யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலாக்குவதற்காக மேற்கொண்ட விட்டுக்கொடுப்புக்களையும் காண முடியும் என்றார்.

### சமாதான....

ஜாங்க செயலாளருமான ரோபேர்ட் சொலிக் நோர்வேக்கு மேற்கொண்ட உத்தியோக் பூர்வ விஜயத்தின் போது இலங்கை இன விவகாரம் குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வொன்றை காணவேண்டுமென அமெரிக்கா விரும்புவதாக ரோபேர்ட் நோர்வேத் தரப்பிடம் தெரிவித்துள்ளார். இலங்கையில் நிலவும் பதற்றம் காரணமாக அமெரிக்காவின் தெற்காசிய பிராந்திய கண்காணிப்புப் பணிகள் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### தியாகி...

அடையாள உண்ணாவிரதம், சிரமதானப் பணிகளும் இடம் பெற்று வருகின்றது. இறுதி நாள் நிகழ்வுகள் பாண்டியன்குளம் இளங்கதிர் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதே வேளை பரந்தன் குமரபுரம் கிராமத்தில் அன்னை பூபதியின் நினைவு நாளை முன்னிட்டு கிராம மக்கள் தேசிய எழுச்சிப் பேரவையினரும் இணைந்து இன்று காலை குமரபுரம் பாடசாலை வீதி சிரமதானப் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

யாழ். மாவட்ட அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் எழுச்சிப் பந்தல்கள், வர்ணக் கொடிகள், எழுச்சி கீதங்கள், சிரமதானப் பணிகள் ஊடாக மக்களை எழுச்சி கொள்ளச் செய்வதென்றும்,

இறுதித் தினமான நாளை மறுதினம் காலை 9.00 மணி முதல் மதியம் 2.00 மணிவரை கோட்டரீதியான அடையாள உண்ணா நோன்பினை நடாத்துவதென்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி வலிகாமம் யாழ். நல்லூர் கோட்டம் கிட்டு நினைவுப் பூங்காவிலும், தீவகம் கிழக்கு வேலணை சிறீ முத்துமாரி அம்மன் கோவில் முன்றலிலும், தென்மராட்சி மாவடிப்பிள்ளையார் கோவில் முன்றலிலும், வடமராட்சி முத்துமாரி அம்மன் கோவில் முன்றலிலும் (மாலுசந்தி கரவெட்டி) மேற்படி அடையாள உண்ணா நோன்பினை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்னை பூபதியின் நினைவாக சிரமதான நிகழ்வு ஒன்று நேற்று பூந்தோட்ட பொது மைதானத்தில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட அரசியற் துறையினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இச் சிரமதான நிகழ்வில் பூந்தோட்டம் சிறீநகர், அண்ணா நகர், மதீனாநகர், காத்தர் சின்னக்குளம், மாறம்மைக்குளம், சிறீராமபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொது மக்களும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் வன்னி மாவட்டத் தலைவர் கே.ஏ செந்தில்நாதன், வவுனியா மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் எஸ் என்ஜி நாதன் ஆகியோரும் பல போராளிகளும் உட்பட 500 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (10,08, 33,)


## சாவு அறிவித்தல்



## செல்லையா-சிவசாமி

திரு.செல்லையா சிவசாமி அவர்கள் 12.04.2005 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னார் கொழும்பு சிவசாமி அன்கம்பனி, வவுனியா நெளுக்குளம் E.S.C ஸ்டோர்ஸ், கிளிநொச்சி லலிதா டிரேடிங் கம்பனி-அன்-நேர்-கோட்டல் உரிமையாளரும் ஆவார். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். இவரின் பிரிவால் ஆழ்ந்த துயருறும் செல்லையா-சிவசாமி கம்பனி கடமையாளர்கள்.

தகவல்:-J.லாசறஸ்
லலிதா டிரேடிங் கம்பனி,
பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.

(சி.11644)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது